Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, MAY 4, 2022

புதன்கிழமை மே 04, 2022 | ஒளி: 07 கதிர்: 296 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

# மன்னார் சென்றார் அண்ணாமலை

■ *றொசேரியன் லம்பட்*



இலங்கைக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை நேற்று (03) மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கத்திலும்

# மொட்டுக்குள் இருவேறு நிலைப்பாடு

**மஹிந்தலை பிரதமராக்க பரிந்துரைப்போம் என்கிறார் பசில்**

தேசிய இணக்கப்பாட்டு அரசாங்கங்கத்தை அமைக்கும் முயற்சியில், பிரதமர் ஒருவரை நியமிக்க ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் பெயர் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும் எனவும், மாற்று தெரிவுகள் இருக்காது எனவும் பசில் ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களிடம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2



## ஜனாதிபதி, பிரதமருக்கு எதிராக பிரேரணைகள் கையளிப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவருக்கு எதிராகவும் ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டுவரும் நம்பிக்கையில்லா பிரேரணை நேற்று (03) பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



ராஜபக்ஷர்கள் உள்ளிட்ட பலரது

# ஊழல்கள் அம்பலம்

**கோப்புகளுடன் அநுர அம்பலப்படுத்தினார்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷர்களின் ஊழல் மோசடிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், வியாபாரிகள், கீழ்மட்ட அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் எனப் பலரது ஊழல் மோசடிக் கோப்புகள் எனக்கூறி ஏராளமான தரவுகளை மக்கள் விடுதலை முன்னணி வெளிப்படுத்தியது.

அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோரின் ஊழல் மோசடிகள் தொடர்பான கோப்புகளை பகிரங்கப்படுத்துவோம் எனக்கூறி கொழும்பு மன்றக் கல்லூரியில் நேற்று (3) இடம்பெற்ற நிகழ்விலேயே அவர்கள் இதனை வெளிப்படுத்தினர். இதன்போதே மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், பல்வேறுபட்ட தரவுகளை வெளிப்படுத்தியிருந்தனர்,

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவின் சொத்துகளில் பெரும்பாலானவை வர்த்தகர் திருகுமார் நடேசனின் பெயரில் உள்ளதாகவும், குறிப்பாக 4,100 மில்லியன் ரூபாய்க்கான ஜின், நில்வலா

தொடர்ச்சி P2

நல்லாட்சி அரசாங்கத்தில்

# சஜித்தும் விழுங்கியவர்

**மூன்று பில்லியன் ரூபாயை சுருட்டினார் என்கிறார் அநுர**

தற்போதைய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் மூன்று பில்லியன் ரூபாய் மோசடியுடன் தொடர்புபட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பாரிய மோசடியில் ஈடுபட்டவர்களின் இரகசிய கோப்புகளை அம்பலப்படுத்தும் பொருட்டு, மக்கள் விடுதலை முன்னணி நேற்று (3) கொழும்பில் விசேட ஊடக சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இதன்போதே மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தொடர்ச்சி P2

புதிய அரசியலமைப்பு வரைவு

# பீரிஸ் தலைமையில் உபகுழு நியமனம்

புதிய அரசியலமைப்பு வரைவின் ஆரம்ப அறிக்கையை ஆராய்ந்து, உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காக, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில், உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அந்த உபகுழுவில், அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ரமேஷ் பத்திரன (வைத்தியர்),

தொடர்ச்சி P2

# நுரைச்சோலையில் பிறப்பாக்கி செயலிழப்பு...

நுரைச்சோலை லக் விஜய அனல் (நிலக்கரி) மின்நிலையத்தில் உள்ள 270 மெகாவோட் மின் பிறப்பாக்கி தொழில்நுட்ப கோளாறு காரணமாக செயலிழந்துள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (03) தெரிவித்தார்.

மின் பிறப்பாக்கியை பழுதுபார்க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், ஐந்து நாள்களுக்குள் மின்நிலையத்தின் மின் பிறப்பாக்கி மீண்டும் தேசிய மின்கட்டமைப்புடன்

தொடர்ச்சி P2



## காலி முகத்திடலில் பெருநாள் தொழுகை

உலகவாழ் முஸ்லிம்கள் நோன்பு பெருநாளை நேற்று (03) விசேடமாக கொண்டாடினர். கொழும்பு காலிமுகத்திடல் கிறினின் விசேட தொழுகைகள் இடம்பெற்றன. அதன்பின்னர், ஒருவருக்கொருவர் பெருநாள் வாழ்த்துகளை பகர்ந்து கொண்டனர்.
(படம்: பிரதீப் பத்திரண)





# இனவாதத்தை தூண்டும் தமிழ் டயஸ்போராக்கள்

**புத்திசாதுரியமாக செயற்படுமாறு போராட்டக்காரர்களிடம் வேண்டுகோள்**

■ *மகேஸ்வரி விஜயனந்தன்*

இலங்கையில் இனவாத்தை தூண்டுகின்ற விடயங்களில் தமிழ் புலம்பெயர் அமைப்புகள் செயற்படுவதாக ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நாலக கொடஹேவா தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (3) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், காலி முகத்திடல் போராட்டக் களத்தில் காட்சிப்படுத்தப்படும் சில இனவாத பதாகைகள் குறித்து வினவியபோதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

குறைந்த வருமானம் பெறும்

# 33 இலட்சம் குடும்பங்களுக்கு ஜூலை வரை கொடுப்பனவு

**மொத்தமாக ரூ. 56,301 மில்லியன் செலவாகும்**

■ *மகேஸ்வரி விஜயனந்தன்*



நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை விசேட கொடுப்பனவு வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. இந்தக் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக, மாதமொன்றுக்கு 18,767 மில்லியன் ரூபாய் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

ஹம்பாந்தோட்டை விவகாரம்:

# குற்றச்சாட்டை மறுக்கிறார் நாமல்



**நல்லாட்சி அரசாங்கத்தால் தொடர்ந்து நீதிமன்றம் செல்கிறேன் என்கிறார்**

தாம் தொடர்புபடாத இரண்டு நிறுவனங்களுக்கு இடையில் இடம்பெற்ற பரிவர்த்தனைகள் குறித்து தன்னையும் தனது குடும்பத்தினரையும் தொடர்புபடுத்தி ஆவணப்படம் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, நல்லாட்சி அரசாங்கம் தன்மீது சுமத்திய பல குற்றச்சாட்டுகளுக்காகவே தான் இன்னும் நீதிமன்றத்துக்கு செல்வதாகவும் இதனுடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சீனாவுடனான பேச்சுகளில் இரகசியம் இல்லை

■ *மகேஸ்வரி விஜயனந்தன்*



சீனாவுடனான தற்போதைய கலந்துரையாடல்கள் மிகவும் சாதகமான திசையில் நகர்வதாகத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான நாலக கொடஹேவா, இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் எதிர்காலத்தில்

தொடர்ச்சி P2

# இலங்கைக்கு சீனா முழு ஆதரவு

**ஐ.எம்.எப்புடனான கலந்துரையாடல் ஆரோக்கியமானது என்கிறார் சென்ஹொங்**

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ சென்ஹொங்க்கும் நிதி அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கையாள்வதில் இலங்கை கையாண்டு வருகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை இலங்கை எதிர்பார்த்துள்ளதாக நிதி அமைச்சர் இதன்போது எடுத்துக்கூறியுள்ளார்.



தொடர்ச்சி P2

# நெருக்கடி நிலைமையில் கைவிட மாட்டோம்

**நிதி அமைச்சர் சப்ரியிடம் பாக்லே தெரிவித்தார்**

நெருக்கடி நிலைமைகளில் இலங்கையின் பிரச்சினைகளை தீர்க்க, இந்தியா முழுமையான ஒத்துழைப்புகள் வழங்கும் என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, நிதி அமைச்சர் அலி சப்ரியிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவை நேற்று முன்தினம் (02) சந்தித்திருந்த நிதி அமைச்சர் அலி சப்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான தற்போதைய



ஒத்துழைப்பு செயற்பாடுகள் மற்றும் தற்போதைய பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு கையாள வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மொட்டுக்குள் இருவேறு நிலைப்பாடு

எனினும் மஹிந்தவின் பெயரை மீண்டும் பரிந்துரைப்பதில் கட்சிக்குள் இருவேறு நிலைப்பாடுகள் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்திற்கு எதிராக எழுந்துள்ள நெருக்கடி நிலைமையை அடுத்து மகாநாயக்க தேரர்களின் கோரிக்கைக்கு அமைய மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை துறப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில், தேசிய இணக்கப்பாடு அரசாங்கம் குறித்து அரசாங்கத்தின் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகும் பட்சத்தில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் யாரை அடுத்த பிரதமர் பதவிக்கு பரிந்துரைப்பது என்ற கேள்வியை கட்சி உறுப்பினர்கள் எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதில் தெரிவித்துள்ள பசில் ராஜபக்ஷ, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் வேறு எவரதும் பெயர்கள் பரிந்துரைக்கப்படாது எனவும், மஹிந்த ராஜபக்ஷவின் பெயரையே மீண்டும் பரிந்துரைக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் பிரசாரத்தின் போதும் மஹிந்த ராஜபக்ஷவே பிரதமர் என்ற வாக்குறுதியை கொடுத்தே மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டார். எனவே மக்கள் ஆணைக்கு மாறாக செயற்பட முடியாது எனவும் பசில் தெரிவித்துள்ளார்.

பஷில் ராஜபக்ஷவின் கருத்துடன் ஒரு சிலர் உடன்பட்டுள்ள போதிலும் பிறிதொரு தரப்பினர் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என கூறப்படுகிறது.

“மஹிந்த ராஜபக்ஷவை பதவி நீக்க வேண்டும் என்ற குரலே அதிகமாக ஒலிக்கிறது. மீண்டும் அவரையே பிரதமராக நியமிக்க வேண்டும் என நாம் பரிந்துரைக்கும் பட்சத்தில் மக்களின் கோபத்தை அது மேலும் அதிகரிக்க செய்யும் செயலாக அமைந்துவிடும். எனவே மாற்று தெரிவு குறித்து சிந்திக்க வேண்டும்” என்ற கருத்துகளை முன்வைத்துள்ளனர். எனினும் பசிலின் நிலைப்பாட்டில் இருந்து மாற்றுக் கருத்துகளை அவர் முன்வைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இனவாதத்தை தூண்டும் தமிழ் டயஸ்போராக்கள்

தொடர்ந்து தெரிவித்த அவர், “கடந்த காலங்களில் யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்த பின்னர், நாட்டின் அனைத்து இன மக்களையும் இணைத்துக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய ஆரம்பித்தோம். யுத்தத்தின் பின்னரும் சில நேரங்களில் இலங்கையிலிருந்து வெளியேறிய சில குழுக்கள், சர்வதேசத்தையும் இணைத்துக்கொண்டு இனவாதத்தை மீண்டும் தோற்றுவிக்க முயற்சிக்கும் போது, நாம் ஜெனீவாவுக்கு சென்று அதற்கு எதிராக குரல் கொடுத்தோம்” என்று குறிப்பிட்டார்.

“காலி முகத்திடல் போராட்ட களத்திலிருந்து வெளிவரும் சில கருத்துகளிடையே சிலர் இதனை தவறாக பயன்படுத்த முயற்சிக்கின்றமையை நாம் அவதானிக்கின்றோம். உதாரணமாக அங்குள்ள அமரர் பண்டாரநாயக்கவின் சிலையின் கண்களை அங்கிருக்கும் சில இளைஞர்கள் கட்டுவதற்கு சில தினங்களுக்கு முன்னர், பிரித்தானியாவின் தமிழ் கார்டியன் என்ற இணையத்தில் பண்டாரநாயக்கவின் சிலையை உடைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே, தற்போது பண்டாரநாயக்க சிலையின் கண்கள் கட்டப்பட்டுள்ளன” என்றார்.

“எனவே இந்த இரண்டு சம்பவங்களுக்குமிடையில் தொடர்பு இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். எனவே புத்திசாலியான மக்களிடம் இந்த விடயங்கள் குறித்து தெளிவாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்” என்று கூறினார். அரசாங்கம், குறித்த போராட்டக்காரர்களுக்கு ஜனநாயக ரீதியான வாய்ப்பை வழங்கியுள்ளது. எனவே அதில் கலந்துகொள்ளும் மக்களும் புத்திசாதுரியத்துடன் செயற்படுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

## ஊழல் அம்பலம்

திட்டத்துடன் சீனா CAMC இன்ஜினியரிங் கோ லிமிடெட் ஒப்பந்தம் மிகவும் பிரபலமற்ற ஒப்பந்தங்களில் ஒன்றாகும் எனக் குறிப்பிட்டார்.

சீனா சி.ஏ.எம்.சி இன்ஜினியரிங் கோ லிமிட்டெட் ஹொங்கொங்கில் வங்கிக் கணக்கு ஒன்றினை வைத்திருக்கும் நிலையில், அது தனித்தனி சந்தர்ப்பங்களில் 5 மில்லியன் டொலர்களை ரூட் இன்டர்நேஷனலுக்கு வழங்கியுள்ளது. குறித்த நிறுவனம் நடேசனுக்கு சொந்தமானது. ரூட் இன்டர்நேஷனல் நிறுவனம், கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வங்கிக்கு நிதியை மாற்றியுள்ளது.அந்தக் கணக்கில் வைப்பு செய்யப்பட்ட பணத்தில் மல்வானையில் உள்ள பிரபல சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

அதேபோல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோசித்த ராஜபக்ஷவின் பெயரில் 32 இடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. நாமல் ராஜபக்ஷவுடன் தொடர்பட்ட மோசடி ஆவணம் இருப்பதாக கூறிய அனுரகுமார,“சந்தஹிரு செய” என்ற படையினரின் நினைவகம் ஒன்றை அமைப்பதற்காக சுங்கத்திணைக்களத்தில் இருந்து பெறப்பட்ட பெருந்தொகை தங்கத்தின் மூலம் செய்யப்பட்ட ஒரு அடி உயரமுள்ள புத்தபெருமானின் சிலைக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை என்றும் கட்சியின் தலைவர் அனுரகுமார கேட்டார். .

எவன்கார்ட் நிறுவத்துடன் கடற்படையினர் செய்துக் கொண்ட உடன்படிக்கையின்படி 25 சதவீத வருமானம் கடற்படைக்கு தரப்படவேண்டும். எனினும் முன்னர் கடற்படை தளபதிகள் சிலர், கடற்படைக்கு வரும் வருமான சதவீதத்தை குறைத்தனர். அதாவது எவன்காட் நிறுவனத்துக்கு கிடைக்கவேண்டிய வருமானம் அதிகரிக்க செய்யப்பட்டது. இதற்கு பதிலாக குறித்த முன்னாள் தளபதிகள் ஓய்வுப்பெற்றதும் அவர்களுக்கு எவன்கார்ட் நிறுவனத்தில் தொழில் வழங்கப்பட்டதாக அனுரகுமார தெரிவித்தார்.

ராஜபக்ஷரின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற பாரிய ஊழல் மோசடிகளுக்கு சர்வதேச ரீதியிலும் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும், இதனுடன் தொடர்புபட்ட பலர் தற்போது சர்வதேச சிறைகளில் அடைக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## 33 இலட்சம் குடும்பங்களுக்கு...

மூன்றுமாத காலத்துக்கு 56,301 மில்லியன் ரூபாய் செலவாகும் என்றும் தகுதிவாய்ந்த 33 இலட்சம் குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன எனவும் வர்த்தக அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதற்கமைய, சமுர்த்தி பயனாளிகள், சிறுநீரக நோயாளர்கள், சிரேஷ்ட பிரஜைகள் மற்றும் விசேட தேவையுடையவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வரும் கொடுப்பனவுகளுக்கு மேலதிக தொகையாக இந்த நிவாரண தொகை வழங்கப்படவுள்ளது.

இன்று எமது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது, இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட மோசமான நெருக்கடியாகும். அரசாங்கத்தின் வருமான இழப்பு மற்றும் வெளிநாட்டு கையிருப்பை வலுப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலே இந்த நிலைமைக்கு காரணம் என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே இதற்கு தீர்வாக உலக வங்கியின் நிதியுதவியுடன் அடையாளம் காணப்பட்டுள்ள 4 பிரிவினருள் சிரேஷ்ட பிரஜைகளுக்கு தற்போது கிடைக்கும் 2,000 ரூபாயை 5,000 ரூபாயாக வழங்கவும் 100 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபாயை 7,000 ரூபாயாக வழங்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது என தெரிவித்தார்.

அத்துடன் விசேட தேவையுடைவர்களுக்கு தற்போது வழங்கப்படும் 5,000 ரூபாயை 7,500 ரூபாயாக வழங்கவும் சிறுநீரக நோயாளர்களுக்கு 7,500 ரூபாயாக வழங்கவும் சமுர்த்தி பயனிகளுக்கு தற்போது வழங்கப்படும் 1,500 ரூபாயை 3,100 ஆக அதிகரித்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். உலக வங்கிக் குழும நிதியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டமான குறிப்பீடற்ற துரித பதிலளிப்பு பிரிவின் மூலம் அதற்கான நிதி வழங்குவதற்கு உடன்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதற்கமைய, அடையாளம் காணப்பட்ட பயனாளிக் குடும்பங்களுக்கு மே மாதம் தொடக்கம் ஜூலை மாதம் வரை குறித்த உதவிகளை வழங்குவதற்கான விசேட கொடுப்பனவு நடவடிக்கைகள் தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் ஆகியோர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## குற்றச்சாட்டை மறுக்கிறார் நாமல்

ஹம்பாந்தோட்டை பல மில்லியன் டொலர் பெறுமதியான வைத்தியசாலைத் திட்டத்துடன் தொடர்புடைய பாரிய ஊழலை அவுஸ்திரேலிய ஊடகமொன்று ஆவணப்படத்தின் மூலம் வெளியிட்டிருந்தது, அதற்கு தனது டுவிட்டர் பக்கத்தில் நேற்று (03) பதில் பதிவிட்டிருந்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை நாமல் தெரிவித்திருந்தார்.

2012 ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டை வைத்தியசாலை நிர்மாணத்தின் போது பொருட்கள், சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் திட்டத்தை அவுஸ்திரேலியாவின் அஸ்பென் மெடிக்கல் நிறுவனம் பெற்றுள்ளது.

அஸ்பென் மெடிக்கலினால் இலங்கைக்கு செய்யப்பட்ட முதல் பரிவர்த்தனையில், இலங்கையர் ஒருவருக்குச் சொந்தமான சபர் விஷன் ஹோல்டிங்ஸ் என்ற பிரித்தானியாவின் விர்ஜின் தீவுகளில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்துக்கு 2.1 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தப்பட்டதாக ஃபோர் கோர்னர்ஸ் ஆவணப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20க்கும் மேற்பட்ட விநியோகஸ்தர்களைக் கொண்ட டச்சு நிறுவனமொன்றுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக அஸ்பென் மெடிக்கல் நிறுவனம் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ள நிலையிலேயே மேற்குறிப்பிட்ட பரிவர்த்தனை இடம்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட 2.1 மில்லியன் அஸ்பென் மூலம் செலுத்தப்பட்ட 4.3 மில்லியன் தொகையின் ஒரு பகுதியாகும் என்றும் இந்நிறுவனத்தின் உரிமையாளர் நிமல் பெரேரா, பல தசாப்தங்களாக இலங்கையின் பலம் வாய்ந்த அரசியல் குடும்பமான ராஜபக்ஷ குடும்பத்துடன் தொடர்புடையவர் என, ஆவணப்படத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷவின் சார்பில் பணம் வசூலித்ததாக நிமல் பெரேரா வாக்குமூலம் அளித்தமையாலேயே 2016ஆம் ஆண்டு நாமல் ராஜபக்ஷ சிறையில் அடைக்கப்பட்டதாக ஃபோர் கோர்னர்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு சீனா முழு ஆதரவு

தற்போதைய பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதில் இலங்கைக்கு சீனா தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக தெரிவித்துள்ள சீனத்தூதுவர், கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை இணைந்து பணியாற்ற எடுத்துள்ள தீர்மானத்தையும் ஆதரிப்பதாகவும் தெரிவித்துள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய பங்குதாரர் என்ற வகையில், இலங்கையின் நிலைப்பாட்டை சாதகமாக பரிசீலித்து, விரைவில் உடன்பாட்டை எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை ஊக்குவிப்பதில் சீனா கூடிய அக்கறை செலுத்தும் எனவும் தூதுவர் உறுதியளித்தார். அதேபோல் இலங்கையின் இன்றைய நிலைமைகளை தாம் நன்றாக அறிவதாகவும், பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து இலங்கை விடுபடுவதற்கு எடுக்கும் முயற்சிகளுக்கு தாம் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இருவருக்கு...

சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழு கூட்டம் நேற்று (3)கூடியிருந்த வேளையில் ஜனாதிபதிக்கு எதிராகவும், அரசாங்கத்துக்கு எதிராகவும் இரண்டு நம்பிக்கை இல்லாப் பிரேரணைகள் கொண்டுவருவது தொடர்பிலும் அதற்கு சகல தரப்பினரதும் ஆதரவை பெற்றுக்கொள்வது குறித்தும் கலந்துரையாடப்பட்டிருந்ததுடன் நேற்று பிற்பகல் குறித்த நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கட்சி தலைவர் மற்றும் எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோர் சபாநாயகரிடத்தில் கையளித்திருந்தனர்.

## மன்னார் சென்றார் அண்ணாமலை

பா.ஜ.கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட குழுவினர் திருக்கேதீஸ்வர கோவிலில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டதோடு, இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டுவரும் திருக்கேதீஸ்வர கோவில் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார். மேலும், திருக்கேதீஸ்வர கோவில் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் அண்ணாமலையுடன் வந்திருந்தார்.

## சஜித்தும் விழுங்கியவர்

2015 முதல் 2019 வரையான காலப்பகுதியில் தேசிய மத்திய கலாசார நிதியத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டுள்ளது. நிதியம் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களின் எந்த அனுமதியும் இன்றி நிதியத்தின் பணம் செலவிடப்பட்டுள்ளது. சஜித் பிரேமதாஸவின் நேரடியான உத்தரவின் கீழேயே இந்த செலவுகளை செய்ததாக சாட்சியமளிக்கப்பட்டுள்ளது.

செலவு செய்து முடிந்த பின்னர் 2019.11.15ஆம் திகதி, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவசர பணிப்பாளர் குழு நியமிக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க, ஜோன் அமரதுங்க, மங்கள சமரவீர, சஜித் பிரேமதாஸ, அகில விராஜ் , மனோ கணேசன், பேர்னாட் பிரியந்த இவர்கள் பணிப்பாளர்கள் குழுவில் இருந்தனர். பணிப்பாளர் குழுவின் தலைவர் என்ற முறையில் ரணில் விக்கிரமசிங்க இதில் கையெழுத்திடவில்லை. பிரதமரின் செயலாளர் ஏக்கநாயக்க கையெழுத்திட்டுள்ளார்.

அகில விராஜ் உட்பட மேலும் சிலர் கையெழுத்திடவில்லை. இது தொடர்பாக விசாரணை நடைபெற்று. விசாரணை அறிக்கை எமக்கு நேற்று( 02) கிடைத்தது. அதனை சரியாக தொகுத்துக் கொள்ள முடியவில்லை. மத்திய கலாசார நிதியத்தின் சுமார் மூன்று பில்லியன் ரூபாய் நிதி முறைகேடு தொடர்பாக கோப்பே சுட்டிக்காட்டியுள்ளது.

## பீரிஸ் தலைமையில்...

அலி சப்ரி பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் அடங்குகின்றனர்.

புதிய அரசியலமைப்பு வரைபை தயாரிப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் சட்டத்துறை நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்கு 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் 9ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, இக்குழுவின் ஆரம்ப அறிக்கை ஏப்ரல் 25ஆம் திகதியன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ள விடயங்களை ஆராய்ந்து உகந்த பரிந்துரைகளை அமைச்சரவைக்கு முன்வைப்பதற்காகவே பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் எம்.பி தலைமையில், உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நுரைச்சோலையில் பிறப்பாக்கி செயலிழப்பு

இணைக்கப்படும் என்றும் இலங்கை மின்சார சபை தெரிவித்ததாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அனல் மற்றும் நீர் மின் நிலையங்களை பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதன் மூலம் மின்வெட்டுகளை மேலும் நீடிக்காமல் முகாமைத்துவம் செய்யப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தென்னாபிரிக்கா மற்றும் ரஷ்யாவிலிருந்து நுரைச்சோலை மின் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலக்கரி, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை போதுமானதாக இருக்கும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

02 மில்லியன் மெற்றிக் தொன் நிலக்கரி நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சீனாவுடனான பேச்சுகளில் இரகசியம் இல்லை

முன்னோக்கி கொண்டு செல்லப்படுமே தவிர அதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படாது என்றும் இக்கலந்துரையாடல்களில் எவ்வித இரகசியங்களும் இல்லை என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (03) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், சர்வதேச நாணய நிதியத்தில் சீனா மிகவும் பொறுப்புடனான முக்கிய பங்கை வகிப்பதாகவும் சர்வதேச நாணய நிதியம் முன்வைக்கும் பொதுவான யோசனைகளுடன் சீனா தொடர்புபடுவதற்கு அதிகம் வாய்ப்புள்ளது என்று குறிப்பிட்டார்.

இதற்கமைய கடந்த வாரம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் சீன பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாடல்கள் இதற்கான சிறந்த அடித்தளத்தை உருவாக்கியுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான பிரதான குழு ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளதுடன் சில புதிய கொள்கைத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது. எனவே நாட்டின் தற்போதைய பாரிய பிரச்சினையாக காணப்படும் அந்நிய செலாவணிக்கு தீர்வாக, ஐ.எம். எப் உடன் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் மாத்திரமின்றி எமது நாட்டுக்கு உதவிகளை வழங்கும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் பலவற்றின் உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாட கிடைத்த சந்தர்ப்பம் மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

“சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை பேச்சுவார்த்தை நடத்தினாலும் உடனடியாக கடன் கிடைக்காது. இது ஏனைய நாடுகளுக்கும் பொருந்தும். இலங்கைக்கு பெருந்தொகை கடன் வழங்குனரான சீனாவுடன் பேச்சுவார்த்தையை நடத்தி, சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பான முன்மொழிவுகளுக்கு நிபந்தனைகளுக்கு இணங்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறு இணங்காவிட்டாலும் அதற்கான மாற்று வழிகள் உள்ளன. ஆனால் எந்தவோர் இடத்திலும் இரகசியத் தன்மையும் இல்லை” என்றார்.

## நெருக்கடி நிலைமையில்...

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுவார்த்தைகள் சாதகமான பெறுபேறுகளை வழங்கும் என தாம் நம்புவதாகவும், இந்தியாவின் ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு கிடைக்க வேண்டும் எனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடி நிலைமையில் இந்தியா கடந்த சில வாரங்களாக இலங்கைக்கு வழங்கும் உயரிய ஒத்துழைப்பு மற்றும் அவசரகால உதவிகளுக்கு தாம் மனப்பூர்வமாக நன்றிகளை தெரிவிப்பதாக கூறியுள்ள நிதி அமைச்சர் அலி சப்ரி, கடந்த மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் கலந்துரையாடல் கூட்டத்தின் போது இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் முன்னெடுத்த கலந்துரையாடல் குறித்தும் கருத்துகளை பகிர்ந்துகொண்டுள்ளார்.

இது குறித்து கருத்துகளை முன்வைத்திருந்த உயர்ஸ்தானிகர், குறிப்பாக இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளில் இருந்து மீள்வதற்கான ஒத்துழைப்பு செயற்பாடுகளில் தொடர்ச்சியாக இந்தியாவின் ஒத்துழைப்புகளையும், உதவிகளையும் பெற்றுக்கொடுக்கப்படும் எனவும், இலங்கையின் கோரிக்கைகள் குறித்து மேலும் பரிசீலிக்கப்படும் எனவும் வாக்குறுதியளித்துள்ளார்.

## அமைச்சரவைத் தீர்மானங்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் நேற்றுமுன்தினம் (02) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:




**தேசிய உடைமையாக பிரகடனப்படுத்தல்:**
பெரஹரா உற்சவங்களில் கலந்து கொண்டுள்ளதும் 2005 தொடக்கம் 2021 வரை 13 தடவைகள் ஸ்ரீ தலதா மாளிகை பெரஹராவின் புனித பேழையை தாங்கி உற்சவ வீதி உலா சென்ற மங்கலகரமான தந்தயானை 'நெதுன்கமுவ ராஜா' 07.03.2022 அன்று உயிரிழந்துள்ளது. 'நெதுன்கமுவ ராஜா' எனும் தந்தயானையை தேசிய உடைமையாக பிரகடனப்படுத்த அமைச்சரவை அங்கிகாரம்.

**டிஜிட்டல் நுழைவாயில் முறைமை:**
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் வினைதிறனை அதிகரிக்க விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி திட்டமிட்டுள்ளது. அதன்கீழ் சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்தின் 'ஒர் அடையாள அட்டை' (One ID) எனும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு முதலாவது முனையத்தின் ஊடாக வெளியேறும் பயணிகளுக்கான டிஜிட்டல் நுழைவாயிலை அறிமுகப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது.
அதற்கமைய, வெளியேறும் முனையத்திற்கான உள்நுழையும் வாயிலில் இலத்திரனியல் கதவு / முக அடையாளத்தைக் கண்டறியும் இயந்திரம் (Electronic gate / Face recognition machines) பொருத்தப்பட்டு பயணிகளின் அடையாளத்திற்காக செல்லுபடியாகும் இலத்திரனியல் உள்நுழைவு அனுமதிச்சீட்டு தன்னகத்தே வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம், இலகுவாக பயணிகள் பரிசோதனைகளைப் பூர்த்தி செய்வதற்கான இயலுமை கிட்டும். அந்த யோசனைக்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**இறக்குமதி, ஏற்றுமதி ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்தல்:**
2022 மார்ச் மாதம் 10 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தெரிவு செய்யப்பட்ட அத்தியாவசியமற்ற மற்றும் அவசரமற்றதுமான பொருட்களின் இறக்குமதிக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கான அங்கிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**வடிகாலமைப்பு சபை சட்டத்திருத்தம்:**
நீர் வழங்கல் துறையில் சமகால மற்றும் எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. ஆரம்ப வரைபைத் தயாரிக்க நீர்வழங்கல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.
ஆரம்ப வரைபின் பிரகாரம் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**மத்திய வங்கி ஆண்டறிக்கையை சமர்ப்பித்தல்::**
2021 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை நாணய சபையால் 29.04.2022 ஆம் திகதி நிதி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்ற அமர்வு இடம்பெறுமாயின், ஆண்டறிக்கை கிடைக்கப்பெற்று 14 நாள்களுக்குள் நிதி அமைச்சர் குறித்த ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**வர்த்தமானி அறிவித்தல்**
பல்வேறு நிறுவனங்களால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகளைக் கருத்தில் கொண்டு சர்வதேச இணங்கியொழுகல்களுக்கு ஏற்புடைய பண்டங்களுக்கான வசதிகளை வழங்குவதற்காக புதிய தேசிய ஒத்திசைக்கப்பட்ட பொருட்களின் உபபிரிவுகள் மற்றும் இறக்குமதி முன்னுரிமை சுங்க குறியீடு (HS National Sub Divisions) வியாபாரப் பண்ட பிரிவுகள் சில புதிதாக உருவாக்கப்பட்டுள்ள.
அவ்வாறு உருவாக்கப்பட்டுள்ள சுங்க அரசிறைப் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 11.01.2022 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த கட்டளைகளின் பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**பெறுகையை வழங்கல்:**
இந்திய ஏற்றுமதி - இறக்குமதி வங்கியின் ஒத்துழைப்பின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றுள்ள 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வசதியின் கீழ் டீசல் மற்றும் பெற்றோல் கொள்வனவு செய்வதற்கான 04 பெறுகைகளுக்காக விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த பெறுகையை வரையறுக்கப்பட்ட இந்தியன் ஒயில் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

**உபகுழுவொன்றை நியமித்தல்:**
வாழ்க்கைச் செலவை நிலையான வகையில் பேணிச் செல்வதற்குத் தேவையான கொள்கை ரீதியானதும் நடைமுறை ரீதியானதுமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக ஜனாதிபதி தலைமையில் பிரதமர் மற்றும் ஏனைய ஏற்புடைய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் பங்கேற்புடன் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணல்:**
நாட்டில் தற்போது நிலவுகின்ற வெளிநாட்டு செலாவணி நெருக்கடிக்கு தீர்வாக துரிதமாக வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்ந்திழுக்கக் கூடிய வகையிலான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காண்பதற்காக கீழ்வரும் அமைச்சர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.
ஊடக அமைச்சர் (கலாநிதி) நாலக கொடஹேவா தலைமையிலான அந்தக் குழுவில், அமைச்சர்களான திலும் அமுனுகம, காஞ்சன விஜேசேகர, பிரமித பண்டார தென்னகோன், இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த ஆகியோர் அடங்குகின்றனர்.

# வரிகளை அதிகரிக்க அரசாங்கம் முயற்சி



ஒரு பக்கம் வரிச்சுமையை அதிகரிக்கும் அரசாங்கம், மறுபுறும் அடக்குமுறைகளைப் பிரயோகித்து மக்களைக் கொன்று வருவதாக ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்தார்.

நிதி அமைச்சர் அலி சப்ரி புதிய வரவு செலவு திட்டமொன்றை சமர்ப்பித்து அதனூடாக வரிச் சுமையை அதிகரிக்க தயாராகி வருகிறார். அரசாங்கத்தின் மோசமான நிர்வாகத்தால் நாட்டு மக்களின் மீது வரிச்சுமையை அதிகரிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். நாட்டின் நெருக்கடி நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை அச்சுறுத்தும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக ஐ.தே.க நடவடிக்கை எடுக்கும் எனவும் அவர் கூறினார்.

### போராட்டக்காரர்களுக்கு
# இலவச பஸ்



அரசாங்கத்துக்கு எதிராக அமைதியான முறையில் போராட்டங்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இலவசமாக பஸ் போக்குவரத்துகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (03) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து கருத்துரைத்த அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் அமைதியாக ஈடுபடுபவருக்காக நாடு முழுவதிலும் இலவச பஸ் போக்குவரத்துகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் அரசாங்கத்துக்கு எதிர்ப்பை தெரிவித்து பாராளுமன்றத்துக்கு முன்பாக பஸ்களை இடைமறித்து நிறுத்தி போராட்டத்தில் எதிர்காலத்தில் ஈடுபடுவோம் எனவும் தெரிவித்ததோடு, 6ஆம் திகதி முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கும் முழு ஒத்துழைப்பை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் வழங்கும் எனவும் தெரிவித்தார்.

## தாய்லாந்திலிருந்து எரிவாயு



2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தாம் அறிமுகப்படுத்திய வேலைத்திட்டத்தின் ஊடாக தாய்லாந்தில் இருந்து மலிவான விலையில் எரிவாயுவைப் பெறுவதற்கான வாய்ப்பு தற்போது சாத்தியமாகியுள்ளதாக, லிட்ரோவின் முன்னாள் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ள அவர், நாட்டிலுள்ள காஸ் மாபியாக்கள் தொடர்பில் வெளிப்படுத்தி, திறந்த விலை மனுக் கோரலின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக நாட்டுக்கு இந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சமையல் எரிவாயு கொள்வனவு தொடர்பில் இதுவரை காலமும் ஒரு குழுவின் கைகளில் இருந்த ஏகபோக மாபியாவை தன்னால் முறியடிக்க முடிந்தததை எண்ணி தான் மகிழ்ச்சி கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### பிரதி சபாநாயகர் யார் ;
## விசேட கூட்டம் இன்று

பிரதி சபாநாயகர் பதவி தொடர்பில் கலந்துரையாடுவதற்காக விசேட கட்சித் தலைவர்கள் கூட்டமொன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இன்று (04) பாராளுமன்றத்தில் நடைபெற உள்ளது.

மேலும் பாராளுமன்றத்தின் இவ்வார செயற்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட உள்ளது. மேலும், பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து தான் விலகப்போவதாக பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிடிட இன்று (04) அறிவிப்பொன்றை விடுக்க உள்ளார்.

பிரதி சபாநாயகர் பதவிக்கு தனது கட்சியின் உறுப்பினர் ஒருவரையும் முன்மொழிய அக்கட்சி தீர்மானித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. இதற்கமைய, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்காரின் பெயரை ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழியவுள்ளது.



## ஆதரவாளர் வீட்டில் துப்பாக்கி மீட்பு

ஹிரான் பிரியங்கர ஜயசிங்ஹ

புத்தளம் மாவட்டத்தில் பிரபல இராஜாங்க அமைச்சர் ஒருவரின் ஆதரவாளரின் வீட்டின் பின்புறமாக உள்ள, விறகுகளுக்குள் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன.

ரி-56 ரக துப்பாக்கி மற்றும் இன்னும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டள்ளார். விமானப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே, நேற்று (03) அதிகாலை 3 மணிக்குச் சென்றிருந்த அதிகாரிகள் அவரை கைது செய்தனர்.

46 வயதான சந்தேகநபரை கைது செய்ததன் பின்னர், மெகசினுடன் கைத்துப்பாக்கி, அதற்கான பைகள், 4 அடி நீளமான வாள் ஆகிய கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், அவர் தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

## "போராட்டக்காரர்களே ஒன்றிணையுங்கள்"



அடக்குமுறை மற்றும் பொலிஸாரின் அதிகாரம் மூலம் மக்களின் இறையாண்மை ஒடுக்கப்படுவதை மக்கள் எதிர்க்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கேட்டுக்கொண்டுள்ளார்.

அலரி மாளிகைக்கு முன்பாக அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை தாக்குவதற்கும் அவர்களை அங்கிருந்து விரட்டியடிப்பதற்கும் பாதுகாப்பு தரப்பினர் திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் வெளியாகியுள்ளதாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அடக்குமுறை மற்றும் பொலிஸாரின் அதிகாரம் மூலம் மக்களின் இறையாண்மை ஒடுக்கப்படுவதை மக்கள் எதிர்க்க வேண்டும் என அவர் முகப்புத்தகம் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

## அண்ணாமலை சி.வி சந்திப்பு

வி.நிதர்ஷன்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் கு.அண்ணாமலைக்கும் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனுக்கும் இடையிலான சந்திப்பு, யாழ்ப்பாணம் கோவில் வீதியில் நேற்று (03) இடம்பெற்றது.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானும் கலந்துகொண்டிருந்தார்.

### மத்திய கலாசார நிதியம்;
## இணையத்தளம், யூடியூப் செனல் திறந்து வைப்பு

மத்திய கலாசார நிதியத்தின் புதிய இணையதளம் மற்றும் யூடியூப் செனல் ஆகியன பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவால் நேற்று (03) இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் நாட்டின் கலாசாரம் தொடர்பில் பிரசாரம் செய்வதும், சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரிப்பதும் இதன் நோக்கமென பிரதமரின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

மத்திய கலாசார நிதியம் இலங்கையின் கலாசார பாரம்பரியத்தை நிர்வகிக்கும் முன்னணி நிறுவனமாகும். மேலும் இலங்கையின் முக்கிய தொல்பொருள் தளங்களின் பாதுகாப்பு, ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், சுவரோவியங்கள், பிற தொல்பொருட்களை பாதுகாத்தல், தொல்லியல் துறையில் மனித வளங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

இலங்கையின் கலாசார சுற்றுலாத்துறையை வழிநடத்தி, இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மத்திய கலாசார நிதியம் பங்களிப்பு செய்கிறது.

ஆரம்பத்தில் கலாசார முக்கோணத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்த நிறுவனம் ஆறு முக்கிய தொல்பொருள் தளங்களுடன் தொடங்கப்பட்டது. அதன் பாரம்பரிய முகாமைத்துவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தி, அதன் நடவடிக்கைகளை நாடுமுழுவதிலும் விரிவுபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# இத்தாலிக்கு தப்பியோட முயற்சித்த ஐவர் கைது

போலியான வீசா அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு இத்தாலிக்குப் பயணிக்க முயன்ற இலங்கையர் ஐவர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய பெண்ணும் அவரின் 14, 18 வயதுடைய மகள்களும் கட்டார் ஊடாக இத்தாலிக்குப் பயணிக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர். இதன்போது அவர்களிடமிருந்த இத்தாலிக்கான வீசா தொடர்பில் சந்தேகம் ஏற்பட, கட்டார் விமான சேவைகள் அதிகாரிகள் அக்குடும்பத்தினரை குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேபோல மாரவிலவைச் சேர்ந்த தாய், தந்தை, மகன், மகளைக் கொண்ட மற்றொரு குடும்பத்தினரும் டுபாய் ஊடாக போலியான வீசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு செல்ல முயற்சித்துள்ளனர்.

இதன்போது குறித்த குடும்பத்தின் தயாரிடமிருந்த வீசா, போலியானதென விமான நிலைய அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட ஐவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகளால் இவர்கள் இத்தாலிக்கு தப்பியோட முயற்சித்தமை தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள ஐவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்
தமிழ்Mirror
பதிவு செய்வதற்கு
Dialog Type TM and send to 87798 Daily Rs.1/=+TAX
HUTCH Type TM and send to 2233 Monthly Rs.30/=+TAX
SLTMOBITEL Type REG TM and send to 77012 Daily Rs.1/=+TAX


ஜனாதிபதி, பாராளுமன்றம் இல்லாமல் நாட்டை

# நிர்வகிக்க முடியுமா?

■ வ.தீவாகரன்

இன்றைய சூழ்நிலையில் ஜனாதிபதி, பாராளுமன்றம் இல்லாமல் நாட்டை நிர்வகிக்க முடியுமா என கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் இரா.துரைரெத்தினம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் இன்றைய ஆட்சி நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (03) கருத்துத் தெரிவித்த அவர், மேலும் அவர் கூறுகையில்,

“கொரோனா காரணமாக ஏற்பட்ட டொலர் தட்டுப் பாட்டாலும், நிதி பற்றாக்குறை, மோசடி ஆட்சி முறை, வெளிநாடுகளின் அழுத்தங்கள், அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் போன்றவற்றால் மக்கள் நேரடியாக பாதிக்கப்பட்டனர்.

“எனவே, அரசாங்கத்துக்கு




எதிராக மூவின மக்களும் கட்சிபேதமின்றி, இன, மத பேதமின்றி வரலாற்றில் இல்லாதவாறு வெகுஜன ரீதியான போராட்டங்களை முடக்கி விட்டுள்ளனர்.

“இந்நிலையில், பெரும்பான்மை பலத்தை இழந்த அரசாங்கம், எதிர்க்கட்சிகளின் பலவீனங்களும், வெளிநாடுகளின் தலையீடுகளாலும் முழுமையாக இந்த ஆட்சியைக் கொண்டு செல்ல முடியாமல் ஸ்தம்பித்துள்ளது.

“மக்கள் பிரதிநிதிகளாக இருந்தாலும் சரி, நிர்வாகமாக இருந்தாலும் சரி உதவி புரிகின்றவர்களில், உதவிகளைப் பெறுவதற்கான ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும்.

“கட்டமைப்பு உருவாக்கப்படாத பட்சத்தில் பலவீனமான திட்டங்களும் நிர்வாகங்களும் தொடர்ச்சியாக ஆட்சியில் இருந்தால் எந்த நாடும் உதவி புரிவதற்கு முன் வராது.

“மக்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டு, ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டம் நடத்தி, அது வன்முறையாக மாறி, இறுதியில் கலவரம், இராணுவ ஆட்சி, சதிப்புரட்சி வரையும் கொண்டு செல்லும்” என்றார்.

# வெள்ளியன்று சங்காபிஷேகம்



■ சகா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோவிலின் முதலாவது நவோத்ர சகஸ்ர சத மகா சங்காபிஷேகம், எதிர்வரும் வெள்ளிக்கிழமை (06) நடைபெறவுள்ளது.

கோவிலின் முதலாவது கும்பாபிஷேகம், கடந்த ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி நடைபெற்றதுடன், தற்போது மண்டலாபிஷேக பூஜைகள் நடைபெற்று வருகின்றன .

கோவில் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வர குருக்கள் தலைமையில் 1,008 சங்குகளுடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (06) காலை 08 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி, முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

சங்காபிஷேகத்தில் கலந்துகொள்ளும் அடியார்களுக்கு மீனாட்சி அம்மனின் திருவுருவப்படம் பொறித்த அட்டை வழங்கப்பட இருக்கின்றது என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.



## விபுலானந்தர் ஜனன தினம்

■ வ.தீவாகரன்

சுவாமி விபுலானந்தரின் 130ஆவது பிறந்ததின நிகழ்வு, கல்லடி, உப்போடையில் அமைந்துள்ள சுவாமி விபுலாநந்தர் மணி மண்டபத்தில் உள்ள அவரது சமாதியில் நேற்று (03) நடைபெற்றது.

சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு சபையின் தலைவர் க.பாஸ்கரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, இராமகிருஷ்ண மிஷன் சுவாமி, அடிகளாரின் சமாதிக்கு பூசை செய்து, மலரஞ்சலி செலுத்தி, வணங்கி விபுலானந்தரின் பணிகள் தொடர்பிலும் கருத்துரை நிகழ்த்தினார்.

சுவாமிகளால் பாடப்பட்ட பாடலும் பாடப்பட்டது. நிகழ்வில் பங்கேற்ற அனைவரும் மலர் தூபி வணக்கம் செலுத்தினர்.









முத்தமிழ் வித்தகரின்

# 130ஆவது ஜனன தினம்

■ கே.எல்.ரி.யுதாஜித்

உலகின் முதல் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 130ஆவது ஜனன தின நிகழ்வு, மட்டக்களப்பில் நேற்று (03) அனுஷ்டிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வு, சுவாமி விபுலானந்த அடிகளாரின் உருவச் சிலை அமைந்துள்ள நீரூற்றுப் பூங்கா வளாகத்தில், மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி ஆணையாளர் உ.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மட்டக்களப்பு மாநகர சபையின் பிரதி மேயர் க.சத்தியசீலன், சுவாமியின் திரு உருவ சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் தேசிய பாடசாலை மாணவிகளால் ‘வெள்ளை நிற மல்லிகையோ’ பாடல் பாடப்பட்டதுடன், அதிதிகளால் நினைவுப் பேருரைகளும் ஆற்றப்பட்டு, ஜனனதின நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன.



## சிறுவர் பூங்கா அபிவிருத்தி

■ ஹஸ்பர்

கிண்ணியா நகர சபையின் கீழ் உள்ள தோனா கடற்கரை சிறுவர் பூங்காவில் புதிய வகையான விளையாட்டு உபகரணங்கள், நேற்று முன்திம் (02) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம்.நிவாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மின்சார ரயில் உபகரணம், வட்ட வடிவிலான சுற்றும் உபகரணம் என்பன அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, சிறுவர் பாவனைக்காக விடப்பட்டன.

UNDPயின் நிதி அனுசரனையில் சுமார் 80 இலட்சம் ரூபாய் செலவில் சிறுவர்களின் பொழுது போக்குக்காக இவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விடுதியில் தங்கிய மாணவர்கள்

## நீதிமன்ற உத்தரவில் வெளியேற்றம்

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கை நிறுவகத்தின் அனைத்து மாணவர்களும் விடுதியில் இருந்து வெளிச்செல்லுமாறு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் தடை உத்தரவை, நேற்று முன்தினம் (02) பிறப்பித்து கட்டளையிட்டது.

பல்கலைக்கழகத்துக்கு மே மாதம் முதலாம் திகதியில் இருந்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில், விடுதியில் இருந்து மாணவர்கள் வெளியேறுமாறு நிர்வாகம் அறிவித்தபோதும் மாணவர்கள் வெளியேறாமல் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து, நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜ.பி. கெனடி, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கினார்.

இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமிந்த நயனசிறி தலைமையில், நீதிமன்றத்தில் மேற்படி தடை உத்தரவு கோரப்பட்டது.

இந்த நீதிமன்ற தடை உத்தரவையடுத்து மாணவர்கள் அனைவரும் அங்கிருந்து வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

இ.தொ.காவை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு அரசியல்

# தொலைநோக்கு தெரியாது



■ நீதர்சன் வினோத்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு அரசியல் தொலைநோக்கு தெரியாது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மஹிந்த ராஜபக்ஷ ஆட்சி முடிவுறும் தருவாயில் உள்ள நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தில் இருந்து வெளியேறியதாக சுமந்திரன் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

“பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைப் போல், வாயில் அரசியல் பேசுபவர்கள் நாங்கள் கிடையாது. யாழ். பொது நூலகத்தை எரித்த ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைந்து ஆட்சியை அமைக்க ஆதரவு வழங்க முடியும் என்றால், அதைவிட அரசாங்கத்திலிருந்து நாங்கள் வெளியேறியதே பெரிய விடயமாக அமையாது.

“ஜீவன் தொண்டமானை மக்கள் பாராளுமன்றம் அனுப்பியது மக்களுக்கு வேலை செய்வதற்கே தவிர, அரசாங்கத்தில் இருந்து வேடிக்கை பார்ப்பதற்கு அல்ல.

“தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் 15 வருடகாலம் இணைந்து பணியாற்றியுள்ளோம். அதேபோல், ஐக்கிய தேசிய கட்சியுடன் 20 வருடங்கள் பணியாற்றியுள்ளோம்.

“எமது கொள்கை மக்களுக்கான தேவைகளை நிறைவேற்றுவதே தவிர, ஆட்சியாளர்கள் யார் என்பதை கருத்தில் எடுப்பதில்லை.


“அந்தவகையில், பிரதமர் தலைமையிலான அரசாங்கத்துடன் இணைந்து, நமது மக்களுக்கு தொடர்ந்தும் பணியாற்ற முடியாத சூழ்நிலையில், நேரடியாக பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னர் அரசாங்கத்திலிருந்து வெளியேறினோம்.

“இலங்கை தொழிலாளர் காங்கிரஸை விமர்சிப்பதற்கு சுமந்திரனுக்கு எவ்வித அருகதையும் இல்லாத நிலையில், எம்மை மீண்டும் சீண்டினால் பதில் கூற முடியாத கேள்விகளை சுமந்திரனிடம் கேட்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்” என்றார்.

கொடிகாமத்தில் விபத்து;

## இளைஞன் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம், கொடிகாமம் பகுதியில் நேற்று (03) அதிகாலை இடம்பெற்ற விபத்தில், கொடிகாமம் - கச்சாய் வீதியை சேர்ந்த யோகேஸ்வரன் நிலாந்தன் (வயது 31) எனும் இளைஞன் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற கப் ரக வாகனமும் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

இதில் , மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் சம்பவ இடத்திலையே உயிரிழந்துள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தியாவுக்கு செல்ல முற்பட்ட

## நால்வர் கைது

■ செந்தூரன் பிரதீபன், வி.நிதர்ஷன், எம்.றொசாந்த், டி.விஜித்தா



சட்டவிரோதமான முறையில் படகு மூலம் இந்தியாவுக்குச் செல்ல முற்பட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என கடற்படையினர் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி, வெண்புரம் பகுதியில் இருந்து இவர்கள் நேற்று முன்தினம் (02) இரவு 11.30 மணியளவில் புறப்பட தயாராக இருந்தபோது, கடற்படையின் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள், வவுனியா பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் இந்தியாவுக்கு செல்வதற்காக அல்லைப்பட்டி பகுதிக்கு வருகை தந்து, படகில் ஏற முற்பட்டதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த ஊர்காவற்றுறை பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்குலைவு காரணமாக இந்தியாவுக்குச் செல்வதற்குத் தாம் முடிவெடுத்ததாக, அவர்கள் கடற்படையினரிடம் தெரிவித்துள்ளனர்.

அநாமதேய

## மோட்டார் சைக்கிள் எரிந்து நாசம்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருநகர் பகுதியில் அடையாளம் காணப்படாத மோட்டார் சைக்கிள், வீதியில் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

வீதியில் மோட்டார் சைக்கின் ஒன்று எரிந்து கிடப்பதாக பிரதேச மக்களால் மல்லாவி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னரே பொலிஸார் அவ்விடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

NP BGP 4799 என்ற இலக்கத் தகட்டை கொண்ட மோட்டார் சைக்கிளே, நேற்று முன்தினம் (02) இரவு இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யாத நிலையில், மல்லாவி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீட்டில் தீ விபத்து; மாணவி மரணம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, பிரான்பற்று பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் (02) மாலை இடம்பெற்ற தீ விபத்தில், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தில் கற்கும் சுதன் சதுர்சியா (வயது 17) எனும் மாணவி உயிரிழந்துள்ளார்.


வீட்டில் தீ விபத்து ஏற்பட்டமையை அறிந்த அயலவர்கள், பரவிய தீயைக் கட்டுப்படுத்தி, மாணவியை அங்கிருந்து மீட்டு, சங்கானை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். எனினும், மாணவி ஏற்கெனவே உயிரிழந்து விட்டார் என வைத்திய சாலையில் வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மதுபானசாலையில்

# போத்தல் குத்து; இளைஞன் பலி

■ செந்தூரன் பிரதீபன், வி.நிதர்ஷன், எஸ் தில்லைநாதன், எம்.றொசாந்த்



மதுபான சாலையில் எழுந்த வாய்த்தர்க்கம், போத்தல் குத்தில் முடிவடைந்ததில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், திக்கம் நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த குணசேகரன் குணசோதி (வயது 25) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் வல்லை வெளி பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையில் நேற்று முன்தினம் (02) மது அருந்திய இரு இளைஞர் குழுக்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

வாய்த்தர்க்கம் முற்றி, இரு குழுவினரும் கைகலப்பில் ஈடுபட்டனர். அதன் போது ஒருவர் மதுபான போத்தல் ஒன்றை உடைத்து இளைஞன் ஒருவரை குத்தியுள்ளார்.

அதனை தொடர்ந்து அக்குழு அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், அங்கிருந்தவர்கள் போத்தல் குத்துக்கு இலக்கான இளைஞனை மீட்டு, பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.

வைத்திய சாலையில் இளைஞன் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், நான்கு சந்தேக நபர்களை அடையாளம் கண்டுள்ள நிலையில், அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மஹா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு, விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான புனருத்தாரண நவ குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் இன்று (04) புதன்கிழமை காலை 8.05 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இந்த மகா கும்பாபிஷேகத்தை கும்பாபிஷேக பிரதம குரு கிரியா ரத்தினா சிவஸ்ரீ ராம் சண்முகானந்தக் குருக்கள், ஆலய பிரதம குரு சர்வபோதகம் பண்டிதர் கலாநிதி து.கு ஜெகதீஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ ஜெகதீஷ மயூரக்குருக்கள், சிவஸ்ரீ சோ. பிரசன்னாக்குருக்கள் ஆகியோர் நடத்தி வைப்பர்.



# தொழிற்றுறையின் அழிவைத் தடுக்கவும்

பிராந்திய தோட்ட நிறுவனங்களுக்கு (RPCs) எரிபொருள் ஒதுக்கீட்டை அரசாங்கம் வழங்கத் தவறியமை, தொடர்ச்சியான மின்சாரத் தடைகள், அறியப்படாத கொள்கை வகுக்கப்படுதல் ஆகியவற்றின் மூலம், இலங்கையின் பெருந்தோட்டங்கள் ஸ்தம்பிதம் செய்யவைக்கப்படுகிறது என இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையால், கொழுந்து, இறப்பர் பால் என அனைத்து போக்குவரத்து நடவடிக்கைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஜெனரேட்டர்களை இயக்க போதுமான எரிபொருள் இல்லை.



அதன்படி, இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிகமாக பங்களிக்கும் இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலுக்கு முன்னுரிமை வழங்க அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்மேளனம் கேட்டுக்கொண்டுள்ளது.

இக்கட்டான நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடகப் பேச்சாளர், கலாநிதி ரொஷான் இராஜதுரை, பிராந்திய தோட்ட நிறுவனங்கள் மற்றும் பரந்த தொழிற்றுறையின் தேவைகளுக்கு அரசாங்கம் தொடர்ந்து முன்னுரிமை வழங்கத் தவறியமையும், தொடர்ச்சியான பேரழிவுகரமான கொள்கைத் தவறுகளும் உற்பத்திக்கு கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தியதாக எச்சரித்தார்.

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து தேயிலையின் போக்குவரத்து மற்றும் விரைவான உற்பத்திச் செலவு சுமார் 30 சதவீதம் அதிகரித்தது என்றார்.

“உண்மையான மற்றும் அர்த்தமுள்ள தீர்வுகள் உடனடியாக வழங்கப்படாவிட்டால், பிராந்திய தோட்ட நிறுவனங்கள் இனி வழக்கம் போல் செயற்பாடுகளைத் தொடர முடியாது” என்றும் தெரிவித்துள்ளார்.

## நீண்ட காலமாக சேதமடைந்துள்ள
# மத்திய வீதி

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை நகர மத்தியில் உள்ள வீதியானது, பாரியளவில் சேதமடைந்துள்ளதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்வோர், வைத்தியசாலை மற்றும் பொலிஸ் நிலையங்களுக்குச் செல்வோரும் இந்த வீதி சேதமடைந்துள்ளதால் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பதுளை விசாகா வித்தியாலயம், ஊவா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகம், பொலிஸ் சேவை மத்திய நிலையம் என்பவற்றுக்கு பிரவேசிக்கும் ஒரே வீதியும் இதுவென்றும் தெரிவிக்கின்றனர்.

அதேபோல், பதுளை வெலேகடே முச்சந்தி, பீல்ல கடே முச்சந்தி என்பவற்றைக் கடந்து, மஹியங்கனை வீதி மற்றும் மகா வித்தியாலயம் என்பவற்றுக்குச் செல்லும் குறுகிய வீதி இதுவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர மத்தியிலுள்ள குறித்த வீதி, நீண்ட காலமாக சேதமடைந்துள்ளமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.



## ஸ்கல்பா தோட்டத்தில்
# கிணற்றிலிருந்து சடலம் மீட்பு



■ பி.கேதீஸ்

தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் ஸ்கல்பா தோட்டத்தில் லயன் குடியிருப்புக்கு அருகிலுள்ள கிணற்றிலிருந்து சடலம் ஒன்று நேற்று முன்தினம் (2) மீட்கப்பட்டது.

9 அடி ஆழமான கிணற்றிலிருந்து 50 வயதான வேலு ராஜரட்ணம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், முதலாம் திகதி இரவு வெளியே சென்று வீடு திரும்பாத நிலையில், வீட்டார் அவரை தேடியுள்ளனர்.

இந்நிலையில் வீட்டுக்கு பின் புறமாக இருந்த கிணற்றிலிருந்து அயலவர்களால் சடலமாக மீட்கப்பட்டார்.

சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் மரண பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, நேற்று (3) உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

**“ இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவர், முதலாம் திகதி இரவு வெளியே சென்று வீடு திரும்பாத நிலையில், வீட்டார் அவரை தேடியுள்ளனர். இந்நிலையில் வீட்டுக்கு பின் புறமாக இருந்த கிணற்றிலிருந்து அயலவர்களால் சடலமாக மீட்கப்பட்டார்**

## பல வாரங்களின் பின்னர்
# ஹட்டனுக்கு மண்ணெண்ணெய்

■ ரஞ்சித் ராஜபக்ஷ



பல வாரங்களுக்குப் பின்னர், ஹட்டன் நகரிலுள்ள சிபெட்கோ எரிபொருள் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் (2) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்ட நிலையில் அதனை கொள்வனவு செய்ய, நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர்.

சிபெட்கோ நிறுவனத்தால் குறித்த எரிபொருள் நிலையத்துக்கு 6,600 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளதாகவும் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஹட்டன்- கொழும்பு வீதியில் மிக நீண்ட வரிசையில் காத்திருந்த நுகர்வோருக்கு, 500 ரூபாய்க்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தன்னெழுச்சிப் போராட்டத்தில் காணப்படும்
# மூவின சமூக ஒற்றுமை நீடிக்க வேண்டும்
### முன்னாள் எம்.பி சென்னன் தெரிவிப்பு

■ ஆ.புவியரசன்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை மையமாகக் கொண்டு, இளைஞர்கள் முன்னெடுத்துள்ள தன்னெழுச்சிப் போராட்டத்தில் காணப்படும் மூவின சமூக ஒற்றுமை, தொடர்ந்து நீடிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள முன்னாள் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், இ.தொ.காவின் முக்கியஸ்தருமான டி.வி.சென்னன், அவ்வாறு நீடித்தால் மட்டுமே நாடு ஊழல் ஆட்சியாளர்களின் பிடியிலிருந்து விடுபட்டு விரைவில் சகஜ நிலைக்குத் திரும்பும் என்றார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், இளைஞர்கள் இன, மத, மொழி பாகுபாடின்றி, நாட்டின் பல்வேறு இடங்களிலும் தொடர்ந்து ஒன்றுகூடி அரசாங்கத்துக்கு எதிராகக் குரல் எழுப்பி, போராடி வருகின்றனர்.

இப்போராட்டங்களில், இனவாத அரசியல் தலைவர்களால் வழக்கத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பல்வேறு நிகழ்வுகள் மீண்டும் மேடையேற்றப்படுகின்றன.

தமிழ் மொழியில் தேசிய கீதம் பாடுதல், அனைத்து சமய நிகழ்வுகளுக்கும் மதிப்பளித்தல் போன்ற சமூக ஒற்றுமையைப் பேணும் அனைத்து நிகழ்வுகளும் இளைஞர்களால் எவ்வித எதிர்பார்ப்புமின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

இளைஞர்களின் இவ்வொன்றிணைவு நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான இதயசுத்தியான ஆரம்பமாக இருக்க வேண்டும்.

எனவே, நாட்டை இடரிலிருந்து மீட்டெடுக்க ஒன்றுபட்டுள்ள மூவின சமூக இளைஞர்களும் போராட்டம் வெற்றியடைந்த பின்னரும் எதிர்கால சந்ததியினரின் சுபீட்சமான வாழ்வுக்காக இதேபோன்று இன ஒற்றுமையைப் பேண வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

## பெருந்தோட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால்
# டொலருக்கு பிரச்சினை ஏற்பட்டிருக்காது

■ பி.கேதீஸ்

இந்த நாட்டுக்கு முதுகெலும்பாக இருந்து அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகின்ற பெருந்தோட்ட தொழிலாளர்களை, இந்த அரசாங்கம் ஊக்குவிக்க தவறிவிட்டமையாலேயே இந்த ஒரு நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளருமான பி.சக்திவேல், பெருந்தோட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தால் இன்று நாட்டில் டொலர் பிரச்சினை ஏற்பட்டிருக்காது என்றார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

எமது நாட்டில், பிரதான ஏற்றுமதி பொருளாக தேயிலை, இறப்பர், தென்னை காணப்படுகின்றன. இதில் அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் தேயிலையே முதலிடம் பெறுகின்றது.

அந்தவகையில், ஆட்சியாளர்கள் பெருந்தோட்டதுறையை உரிய முறையில் பாராமரிக்க தவறியமையால் இந்த டொலர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதற்கு இந்த அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த அரசாங்கம் மட்டுமல்ல, இதற்கு முன்பிருந்த எல்லா அரசாங்கங்களும் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இதனாலேயே நாம் அந்நியச் செலாவணியை இழந்திருக்கின்றோம்.

இதனால் தேயிலை ஏற்றுமதியில் இலங்கை வீழ்ச்சியைக் கண்டது. அந்நிய செலாவணியை அன்றே இழந்துவிட்டது. உணவுகளையோ கனிய வளங்களையோ நாம் பெற வெளிநாடுகளில் கையேந்த தேவையில்லை. இவை எல்லாம் எமது நாட்டில் இருக்கின்றன என்றார்.



## ஹட்டன் சதொசவில் நிவாரண விலை
# அரிசிக்கு நீண்ட வரிசை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அரிசிக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு, நேற்றுமுன் தினம் (02) நள்ளிரவு விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், ஹட்டன் சதொச கிளை மூலம் நாடு அரிசி ஒரு கிலோ கிராம் 145 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும் நுகர்வோருக்கு தலா 5 கிலோ கிராம் மாத்திரமே விநியோகிக்கப்படுவதாகவும் நாட்டரிசியைத் தவிர, வேறு எவ்வகையான அரிசியும் தமது சதொச கிளைக்கு கிடைக்கவில்லை என ஹட்டன் சதொச கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்தின் புதிய நிர்ணய விலைக்கு தம்மால் அரிசியை விற்பனை செய்ய முடியாது என்றும் அதிக விலைக்குத் தாம் கொள்வனவு செய்து, 200 ரூபாய் நிர்ணய விலைக்கு விற்பனை செய்ய முடியாது என ஹட்டன் நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.



## ஆசிரிய தொழிற்சங்கங்கள் மலையகத்தில்
# பாரிய ஆர்ப்பாட்டத்துக்கு தயாராகின்றன

■ பி.கேதீஸ்

ஆசிரியர் விடுதலை முன்னணி ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து, எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நுவரெலியா மாவட்டத்தில் பல இடங்களில் அரசாங்கத்துக்கு எதிராக கவனயீர்ப்பு போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலாளர் என்.டி.எஸ்.நாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அனைத்து ஆசிரியர்களும் ஒன்றிணைந்து எரிபொருள் விலையேற்றம், அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு - விலையேற்றம் என்பவற்றைக் கண்டித்து இந்த மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

நுவரெலியா, தலவாக்கலை, கொட்டகலை, டயகம, ஹோல்புறூக், ஹட்டன், நோர்வூட், மஸ்கெலியா, பொகவந்தலாவ, கினிகத்தேன, வலப்பனை, ஹங்குராங்கெத்த, கொத்மலை ஆகிய நகரங்களில் ஆசிரியர் விடுதலை முன்னணி ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் இணைந்து இந்தக் கவனயீர்ப்பு போராட்டங்களிலும் ஆர்ப்பாட்ட பேரணிகளிலும் ஈடுப்படவுள்ளது.

இந்த அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளுக்கு செவிசாய்க்கும் வரை எமது போராட்டங்கள் ஓய்வதில்லை என்றார்.



# மலையகத்தில் நோன்புப் பெருநாள்

தியாகத்தை போதிக்கும் புனித நோன்புப் பெருநாளை, நாட்டின் பொருளாதார சிக்கல் நிறைந்த சூழ்நிலையில், இம்முறை இலங்கை முஸ்லிங்கள் சுகாதார வழிமுறைகளைப் பேணி, அமைதியான முறையில் நாடுதழுவிய ரீதியில் நேற்று (03) கொண்டாடினர். அதற்கமைய, ஹட்டன் நகரில் பிரதான ஜும்மா பள்ளிவாசலில் மௌலவி ஷாஜகான் தலைமையில் விசேட ரமழான் தொழுகைகள் நடைபெற்றதுடன், அக்குறணையிலும் அஸ்ஹர் தேசிய பாடசாலை மைதானத்தில் பெருநாள் தொழுகை நடைபெற்றது. (எஸ். கணேசன், மொஹமட் ஆஸிக்)







# மீண்டும் மீண்டும் அதிகரிக்கும் வரிசைகளும் ‘கை’ வரிசைகளும்

இறக்குமதி அதிகரிக்கப்பட்டு, பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் குறையுமாயின், வரிசைகளும் ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் குறைந்துவிடுமென்ற அரசாங்கத்தின் அதீத நம்பிக்கையின் மீது, மண்ணை வாரி இறைத்தாற் போல, வரிசைகள் மீண்டும், மீண்டும் நீண்டுகொண்டே செல்கின்றன.

பொருட்களுக்கான தட்டுப்பாடு நிவர்த்தியாகுமென எதிர்பார்த்திருந்த போதிலும், காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை நீடிக்கின்றது. பொருளாதார நிர்வாக சீர்குலைவே இவற்றுக்கெல்லாம் பிரதான காரணமாகும். இதற்கிடையில், அரசியல் இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காக கண்ணாமூச்சி ஆட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

“நான் விலகமாட்டேன்”, “என்னை அவர் விலகச்சொல்லவில்லை”, “எனக்குப் பெரும்பான்மை இருக்கிறது” என்ற கதைகள்தான் அரசியல் அரங்கில் அடிபடுகின்றன. ‘சாட்சியின் கால்களில் விழுவதை விடவும் சண்டைக்காரரின் கால்களில் விழுவதே மேல்’ என்ற கோட்பாட்டை, ராஜபக்ஷர்கள் கையில் எடுத்துள்ளனர். ஏனெனில், எப்போதாவது சாட்சி மாறிவிடும்.

தங்களுக்கு எதிரானவர்களை அழைத்த ராஜபக்ஷர்கள், அவர்களை வளைத்துப் போட்டு, இடைக்கால அரசாங்கம் என்பதற்கு அப்பால் சென்று, ‘தேசிய ஒருமித்த அரசாங்கம்’ எனும் போர்வைக்குள் நின்று நாடகமாடிக் கொண்டிருக்கின்றனர். ஒரு பிரச்சினையைக் கண்டுகொள்ளாது விடின், சில நாள்களுக்குப் பின்னர், தானாகவே அப்பிரச்சினை மறக்கடிக்கப்பட்டுவிடும் என்பது, அரசியல் இராஜதந்திரம்.

எனினும், காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு, 24 நாள்கள் கடந்துவிட்டன. ஆரம்பிக்கப்பட்ட அதே வீச்சில், எவ்விதமான தொய்வும் இன்றி, முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை, அரசாங்கம் நினைவில் கொள்ளவேண்டும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஆகியோர் வீடுகளுக்குச் செல்லவேண்டும் என்பதே, பிரதான கோரிக்கையாக இருந்தாலும் அதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகும்.

எனினும், அரசியல் பிரச்சினைக்கு இன்று (05) தீர்வொன்று எட்டப்படுமென பரவலாக கூறப்படுகின்றது. அவ்வாறு நடக்குமாயின், அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் சிறந்ததாக அமையும். இதனிடையே ஜனாதிபதி தலைமையில் கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில், சமுர்த்தி, வயோதிப, சிறுநீரக மற்றும் வலுவிழந்தோர் கொடுப்பனவுகளைப் பெறும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மே முதல் ஜூலை வரையிலும் உதவிகளை வழங்க அங்கிகாரம் கிடைத்துள்ளது. அதிலும் கைவரிசையை காண்பித்துவிடக்கூடாது.

எனினும், தட்டுப்பாடுகளுக்கும், வரிசைகளுக்கும் குறைவே இல்லை. எல்லா வரிசைகளிலும் ‘கை’ வரிசை காண்பிக்கப்படுகிறது. அதுகுறித்து அவதானமாக இருக்கவேண்டும். குடும்பத்தலைவன், வேலைக்குச் சென்றவுடன், குடும்பத்தலைவிகளே பெரும்பாலும் வரிசையில் நிற்கின்றனர்.

இவ்வாறானவர்களையும் வயதானவர்களையும் அணுகும் சிலர், “எரிபொருளை நாங்கள் பெற்றுத்தருகின்றோம்; நீங்கள் நிழலில் இருங்கள்” எனக் கூறிவிட்டு, பணத்தோடு மாயமாகிவிடுகின்றனர். இன்னும் சிலர், பெண்கள், வயதானவர்களின் பணப்பையை அபகரித்துக்கொண்டு ஓடிவிடுகின்றனர்.

ஒருபக்கம் அரசாங்கமும் மறுபக்கம் முடிச்சுமாறிகளும் தங்களுடைய கைவரிசையைக் காண்பித்துக் கொண்டுதான் இருக்கின்றனர். இவை எல்லாம் குறித்தும் அவதானமாக இருப்பதே, யாவருக்கும் நலமாகும் என்பதை நினைவூட்டுகின்றோம்.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்


www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# மக்கள் ஆணையை இழந்துவிட்ட அரசாங்கம்



எம்.எஸ்.எம். ஐயூப்

முன் ஒருபோதும் இல்லாத வகையில், நாட்டில் ஏற்பட்டு இருக்கும் பொருளாதார நெருக்கடி, நாட்டில் முன் ஒருபோதும் இல்லாத அரசியல் நெருக்கடியை தோற்றுவித்து உள்ளது. ஆட்சியாளர்கள் பதவி விலகிச் செல்ல வேண்டும் என்று, பொதுமக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்திய சம்பவம், நாட்டில் இதற்கு முன்னர் ஒருபோதும் நிகழ்ந்ததில்லை.

பொதுமக்களோடு சேர்ந்து எதிர்க்கட்சிகளும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ஆட்சியாளர்கள் பதவி விலக வேண்டும் என்று கோரும் அதேவேளை, அரசாங்கத்தில் ஒரு சாராரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று கோருகின்றனர்.

மஹிந்தவால் அரசியலுக்குள் ஈர்த்துக் கொள்ளப்பட்டவர்களும் மஹிந்தவின் பெயரைக் கூறி அரசியலில் இடம் பிடித்துக் கொண்டவர்களும், இவ்வாறு கோருகின்றவர்களுடன் அடங்கியிருக்கிறார்கள்.

எந்த நிலையிலும் தாம் பதவி விலகப் போவதில்லை என மஹிந்த, கடந்த வாரம் ‘டெய்லி மிரர்’ பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் கூறியிருந்தார். மக்கள் ஆணையைப் பெற்றே, தாம் பதவியில் இருப்பதாகவும் எனவே, தாம் பதவி விலக வேண்டிய அவசியம் இல்லை என்றும் மஹிந்த கூறியிருந்தார்.

கோட்டாபய வெளிப்படையாக எதையும் கூறாவிட்டாலும், மக்கள் எவ்வளவு தான் ஆர்ப்பாட்டம் செய்தாலும் அவரும் பதவியைத் துறக்கத் தயார் இல்லை என்றே தெரிகிறது. கோட்டாபயவும் மஹிந்தவும் தேர்தல்களின் போது, மக்களின் வாக்கால் தெரிவு செய்யப்பட்டே பதவிகளில் உள்ளனர். எனவே, சட்ட ரீதியாகவும் மரபு ரீதியாகவும் மஹிந்தவின் வாதம் சரியென்றே பலரும் கூறுவர். அதேவேளை, இந்தத் தலைவர்களுக்கு வாக்களித்த மக்களில், இவர்களை வெளியேறுமாறு கூறுவோரின் எண்ணிக்கை அதிகமா, இன்னமும் ஆதரிப்போரின் எண்ணிக்கை அதிகமா என்று அளந்தறிய எவ்வித வழியும் இல்லை. அதற்காக அபிப்பிராய வாக்கெடுப்பொன்றைத் தான் நடத்த வேண்டியிருக்கும்.

எனவே, அவர்கள் பெற்ற மக்கள் ஆணை இன்னமும் இருக்கிறது என்று சிலர் வாதிடலாம். ஆயினும், இதேபோல் அதனை அளந்தறிய வழியில்லாமையால், இத்தலைவர்களை எதிர்ப்போரின் எண்ணிக்கையே அதிகம் என்று மற்றொருவர் வாதிடலாம்.

ஐம்பது இலட்சம் வாக்குகளைப் பெற்று மைத்திரிபாலவை 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக அரியாசனத்தில் அமர்த்திய ஐ.தே.க, மூன்றாண்டுகளில் அதாவது 2018 ஆம் ஆண்டு, உள்ளூராட்சி மன்ற தேர்தலின் போது, தமது வாக்குவங்கியில் மூன்றில் ஒரு பகுதியை இழந்திருந்தது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக, பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்த ஒருவரை கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளது. எனவே, எண்ணிக்கையில் அரசாங்கத்தை எதிர்ப்போரே அதிகம் என்பது தெளிவான விடயமாகும். எனவே, மக்கள் ஆணை என்று கூறிக்கொண்டு, பிரதமரோ ஜனாதிபதியோ தொடர்ந்தும் பதவியில் தொற்றிக் கொண்டு இருக்க தார்மீக உரிமையில்லை.

இந்த விடயத்தில், பொது அறிவையும் மனச்சாட்சியையும் இழந்து, பிரதமர் கருத்து வெளியிடக் கூடாது. பொருளாதார நெருக்கடி, பாரிய அரசியல் நெருக்கடியாக மாறி, அரசாங்கம் வெளியேற வேண்டும் என்று மக்கள் நாடெங்கிலும் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

வரலாற்றில் ஒருபோதும் இல்லாதவாறு காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் முன்னால் ஆயிரக்கணக்காண இளைஞர்கள், யுவதிகள் நவீன தொழில்நுட்பங்களைப் பாவித்து, இரவு பகலாக, மூன்று வாரத்துக்கு மேலாக, தொடர்ச்சியாக ஆரப்பாட்டம் நடத்தி வருகிறார்கள். அந்த இடம் தற்போது நிரந்தர போராட்டக் களமாகிவிட்டது.

அந்த ஆர்ப்பாட்டத்துக்கு அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், தொழில்சார் நிபுணர்கள், மாணவர்கள், கலைஞர்கள், ஆதிவாசிகள் போன்ற சமூகத்தில் பல்வேறு துறைகளை சார்ந்தவர்கள் ஊர்வலமாக வந்து ஆதரவு தெரிவிக்கிறார்கள். அவர்களுக்கு செவிசாய்க்குமாறு பிரதான பிரவாகத்தின் ஊடகங்கள், ஆசிரியர் தலையங்கங்கள் மூலம் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன.

வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும், அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று அந்தந்த நாடுகளில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். மாநாயக்க தேரர்களும் பிரதமரை நீக்கிவிட்டு எதிர்க்கட்சிகளோடு இணைந்து இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குமாறு கூறி வருகின்றனர்.

ஒரு காலத்தில் ஓர் அரசனைப் போல் இருந்த மஹிந்த, உயர்நீதிமன்றத்தின் கட்டளைகளையும் பகிரங்கமாகவே உதாசீனம் செய்தார். இப்போது அவரது அரசாங்கத்தின் கோரிக்கைகளை, சாதாரண நீதிவான் நீதிமன்றங்களே நிராகரித்து, ஆர்ப்பாட்டங்களை நடத்த இடமளித்து வருகின்றன. எனவே, பிரதமர் கூறும் மக்கள் ஆணையை, மக்களே மீளப் பெற்றுவிட்டார்கள்.

தாம் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் அதேவேளை, தமக்கும் தமது எதிர்கால சந்ததியினருக்கும் சுபிட்சமான வாழ்வையும் பாதுகாப்பையும் உத்தரவாதம் அளிப்பதற்காகவே, அரசியல்வாதிகளுக்கு தமது ஆணையை மக்கள் வழங்கி, அவர்களை ஆட்சியாளர்களாக்கின்றனர்.

அதாவது, மக்கள் ஆணை என்பது ஒரு பாரிய பொறுப்பாகும். அதனை நிறைவேற்றத் தம்மால் முடியாது என்பதை, அரசாங்கமே தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது.

எனவே, தமது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களை நீக்கிவிட்டு, ஏனைய கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு அமைச்சரவையை அமைக்க ஜனாதிபதி முயல்கிறார். ஆகவே, தேர்தலின் போது மக்கள் தமக்கு வழங்கிய ஆணை, தற்போது செல்லுபடி அற்றதாகிவிட்டதை ஜனாதிபதியும் பிரதமரும் உணர வேண்டும்.

மக்கள் ஆணை என்பது, வெறுமனே நாடாளுமன்றத்தில் ஒரு கட்சியின் ஆசன எண்ணிக்கை அல்ல. அது மீளப்பறிக்க முடியாத உரிமையும் அல்ல. அது ஜனாதிபதியோ, பிரதமரோ, அரசாங்கமோ செய்யத்தகாத செயல்களுக்கும் செய்யத் தவறும் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பை ஏற்க வேண்டிய கடப்பாடு மிக்கது.

மக்கள் ஆணை என்பது, ஆட்சியாளர்களுக்கு எதையும் செய்வதற்கு வழங்கும் ஓர் உறுதிப்பத்திரம் அல்ல; அது நிபந்தனையற்றதுமல்ல. அது, மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்; மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

ஜனாதிபதியோ பிரதமரோ, அவ்வாறு நினைத்து இதுவரை செயற்பட்டதாகக் கூற முடியுமா? ஓர் அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முயன்றும் அவை தீர்க்கப்படாவிட்டாலும், அந்த அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை செல்லுபடி அற்றதாகிவிடுகிறது.

ஏனெனில், அந்த அரசாங்கம் பொருத்தமற்ற உத்திகளை கையாண்டதாலேயே பிரச்சினைகள் தீரவில்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது பிரச்சினைகளைத் தீர்ப்பதைப் பார்க்கிலும் அடுத்துவரும் தேர்தல்களில், வெற்றிபெறுவதை மனதில் வைத்தும் மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் நோக்கிலுமே பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசாங்கம், ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல், பெறுமதியான நாணய நோட்டுகளை அண்மையில் அச்சிட்டது. அதன் மூலம், நாட்டில் பணவீக்கம் வெகுவாக அதிகரித்தது. ஜனாதிபதி பதவிக்கு வந்து ஒரு மாதத்தில், அடுத்து வரும் பொதுத் தேர்தலை மனதில் வைத்து, வர்த்தகர்களுக்கு வழங்கிய பாரிய வரிச் சலுகைகளே, அரச வருமானம் குறைந்து பணம் அச்சிடும் நிலைக்கு அரசாங்கத்தை தள்ளின. தற்போது வானளாவ உயரும் விலைவாசிக்கு அதுவும் பிரதான காரணமாகும்.

பின்னர், பசளைக்கு செலவாகும் வெளிநாட்டு செலாவணியை மீதப்படுத்திக் கொள்வதற்காகவும் சேதனப் பசளை மூலம் மட்டும் விவசாயம் செய்யும் நாடு என்ற பெயரை பெற்றுக் கொள்வதற்காகவும், ஒரு சில விடயம் அறியாத ஆலோசகர்களின் ஆலோசனையைக் கேட்டு, இரசாயன பசளை இறக்குமதியை ஜனாதிபதி தடை செய்தார். அதனால், நாட்டில் விவசாயம் வெகுவாக பாதிக்கப்பட்டது. தற்போதைய உணவு விலை ஏற்றத்துக்கு அதுவும் ஒரு காரணமாகும். தமது கொள்ளைக்கார வர்த்தக மாபியாவை திருப்திப்படுத்தி, அவர்கள் மூலம் இலாபமடைய அரச தலைவர்கள் சீனிக்கான வரியை 50 ரூபாவிலிருந்து 25 சதம் வரை குறைத்தனர். ஆனால், வர்த்தகர்கள் சீனியின் விலையை குறைக்கவில்லை. அரசாங்கம் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் இல்லை. இதன் காரணமாக, திறைசேரி 1,500 கோடி ரூபாய்க்கு மேல் இழந்தது.

இவ்வாறு, ஜனாதிபதியும் அரசாங்கமும் நாட்டை சீரழித்ததன் பின்னர், வெளிநாட்டு கடன்களை மீளசெலுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அந்தப் பிரச்சினையை தீர்க்க, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாட வேண்டியதாயிற்று. அதைப் பல நிபுணர்கள் பல முறை சுட்டிக்காட்டியும் அரச தலைவர்களும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலும் அதற்கு உடன்படவில்லை. உரிய நேரத்துக்கு சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் தான் அரசாங்கம் அந்த முடிவை எடுத்துள்ளது.

இவ்வாறு நாட்டை சீரழித்தவர்கள், தாம் மக்களின் ஆணையிலேயே பதவியில் இருக்கிறோம் என்று எவ்வாறு கூற முடியும்? ஆகவே, தேர்தல்களின் போது மக்கள் இந்த ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் வழங்கிய ஆணை காலாவதியாகிவிட்டது. தார்மீக கண்ணோட்டத்தில் பார்த்தால், இப்போது இவர்கள் வெளியேற வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

மனித உயிர்களுக்கு மட்டுமல்ல, பிறப்பு எடுக்கும் எல்லா ஜீவன்களுக்கும் இந்தப் பிறப்பு ஒரே ஒரு தடவைதான். இது ஓர் அரிய சந்தர்ப்பம். அடுத்த பிறவி பற்றி ஆராயாமல், வாழும் காலத்தில் நல்ல கருமங்களைச் செய்வதே சிறப்பானதாகும்.

வாழும் காலத்தில், நாம் என்ன செய்து கொண்டிருக்கின்றோம் என்பதில் நேரிய தெளிவும் உழைப்பும் அவசியமானது.

ஒவ்வொரு பொழுதும் கடந்த வண்ணமிருக்கின்றது. எனவே, அவதானமாக அறிவுடன் இயங்குவதே ஆக்கபூர்வமானதாகும்.

நாளைக்கு எனச் சொல்வதை நிறுத்துங்கள். எல்லா வேலைகளையும் ஒரே நாளில் செய்ய முடியாது. செய்யும் கருமங்களை அட்டவணைப்படுத்துக! முறைப்படி கருமம் ஆற்றுவதற்கு, அவை பற்றிய அறிதலுடன், உணர்ந்து செய்தால், காரிய சித்தி உண்டாகும்.

சில தடவைகள் எதிர்பாராத துன்பங்கள் நடப்பதும் இயற்கை. ஆனால், அதற்குள் தொடர்ந்து சுழலாமல், இயங்கியே ஆகவேண்டும். உலகுக்கான சேவையை மறக்காதீர்கள்!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### நெடுந்தீவு கிழக்கு கரையோரத்தில் இறங்குதுறைகளின் அவசியம்

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கிழக்கு கரையோரப் பகுதியில் சரியான இறங்குதுறைகள் இன்மையால், தமது கடற்றொழில் உபகரணங்களை கரைசேர்ப்பதிலும் படகுகளைப் பாதுகாப்பதிலும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நெடுந்தீவு கிழக்கில் பிடாரி அம்மன் கோவில் முதல் காளவாய் முனை வரையான கரையோரப் பகுதிகளில், கடற்றொழிலாளர்கள், இறங்குதுறைகள் இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த கரையோரப் பகுதிகளில், சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். கரையோரப் பகுதிகளில் முருகைக் கற்பாறைகள் காணப்படுவதால் மீனவர்கள், தமது கடற்றொழில் படகுகளை, கரையில் இருந்து கடலுக்கு கொண்டு செல்வதிலும் கரைசேர்ப்பதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன், கடும் காற்றுக் காலங்களில் படகுகளை பாதுகாக்க முடியாதநிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்நிலைமையை சரிசெய்யும் பொருட்டு, மீனவர்கள் சிரமம் இன்றி கடற்றொழிலில் ஈடுபடும் வகையிலும் அவர்களது மீன்பிடி உபகரணங்களை பாதுகாக்கும் பொருட்டும் இறங்குதுறைகளை அமைத்துத் தருவதற்கு சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நெடுந்தீவு கிழக்கு கரையோர மீனவர் சமூகம் கேட்டுக்கொள்கின்றது.

–யது பாஸ்கரன்



சென்னை

# தொடும் தொலைவில் போதை: விழிப்புணர்வால் என்ன பயன்?

மாணவர்கள் தொட்டுவிடும் தொலைவில் போதையை வைத்து விட்டு, விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தி என்ன பயன் விளையும்? என்று பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) நிறுவுநர் ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து நேற்று (03) அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தில் மாணவர்களின் ஒழுக்கம், எதிர்காலம் குறித்த கவலையை ஏற்படுத்தும் வகையில் பல நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மாணவர்கள் நலனுக்காக வரும் கல்வியாண்டில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் முன்னெடுப்புகள் குறித்து தமிழக அரசு அறிவித்திருக்கிறது. அவை தேவையானவை; வரவேற்கத்தக்கவை. என்றாலும்



கூட, மாணவர்களைச் சுற்றி மிக மோசமான சூழலை உருவாக்கி வைத்து விட்டு, இவற்றைச் செய்வது விழலுக்கு இறைத்த நீராகவே அமையும்.

மாணவர்களை நல்வழிப்படுத்த வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமும் ஆகும். இதைப் புரிந்து கொண்ட தமிழக அரசு, அதற்காக மாணவர்களின் கவனத்தை ஏனைய துறைகளுக்கு திருப்புவது அத்தியாவசியமானது. போதைப் பொருட்களுக்கு அடிமையாகாமல் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவது முக்கியம்.

மாணவர்கள் தவறான வழியில் பயணிப்பதற்கு, சமூக நல நோக்கமற்ற திரைப்படங்களும் சமூக சூழலும் தான் முக்கிய காரணங்கள். எரிவதை பிடுங்கினால் தான் கொதிப்பது நிற்கும்; மதுக்கடைகளை மூடினால் தான் மாணவர் சமுதாயத்தை காப்பாற்ற முடியும் என்பதை மறந்து விட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்போவதாகக் கூறுவது கொதிக்கும் உலையில் நீர் ஊற்றுவதற்கு ஒப்பானது தான். அதனால் எந்தப் பயனும் ஏற்படாது. மாணவர் சமுதாயம் சீரழிவதையும் தடுக்க முடியாது என்றும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



மதுரை

## "உயிரே போனாலும் பிரவேசத்தை நடத்துவோம்"

"உயிரே போனாலும் தருமபுரம் ஆதீனத்தின் பட்டினப் பிரவேச நிகழ்ச்சியை நடத்துவோம். நானே பல்லக்கை எனது தோளில் சுமப்பேன்" என்று மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பராமாச்சாரிய சுவாமிகள் கூறியுள்ளார்.

தருமபுரம் ஆதீனத்தில் பட்டினப்பிரவேச நிகழ்ச்சி மே.22 நடைபெறவுள்ளது. இதற்கு திராவிடர் கழகத்தினர் எதிர்ப்பு தெரிவித்ததைத் தொடர்ந்து, தருமபுரம் ஆதீனத்தில் நடைபெறவுள்ள பட்டினப்பிரவேச நிகழ்வில் ஆதீனத்தை பல்லக்கில் அமர்த்தி பக்தர்கள் சுமந்து செல்ல தடை விதித்து, மயிலாடுதுறை கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி உத்தரவிட்டுள்ளார். இதற்கு தமிழகம் முழுவதும் இந்து அமைப்புகள், ஆதீனங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், "பாரம்பரியமிக்க தருமபுரம் ஆதீனத்தில் பட்டினப்பிரவேச நிகழ்வு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலும் நடந்தது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலும், முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆட்சிக்காலத்திலும் நடந்துள்ளது. பாரம்பரியமாக நடந்த இந்தப் பட்டினப் பிரவேசத்தை திடீரென நிறுத்துவது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. முதலமைச்சராகப் பொறுப்பேற்கும்போது இரகசிய பிரமாணம் எடுப்பதுபோலத்தான், பட்டினப்பிரவேசமும் பாரம்பரியமாக நடந்து வருகிறது. அதை தடுத்து நிறுத்துவது வருத்தமளிக்கிறது. முறைப்படி நடப்பதை தடுக்கக்கூடாது என்றார்.



மத்திய பிரதேசம்

## ஒரே மணமேடையில் 3 பெண்களை திருமணம் செய்த நபர்

நபர் ஒருவர் ஒரே மணமேடையில் 3 பெண்களைத் திருமணம் செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மத்தியபிரதேச மாநிலம் , அலிராஜ்பூர் மாவட்டத்திலுள்ள மோரி பாலியா கிராமத்திலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த 42 வயதான சர்பஞ்ச் மௌரியா என்ற நபரே இவ்வாறு தனது காதலிகளைத் திருமணம் செய்துள்ளார். இத்திருமணத்தின் போது குறித்த மூன்று பெண்களுடன் அவருக்குப் பிறந்த ஆறு குழந்தைகளும் பங்கேற்றுள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் "பஞ்சாயத்து தலைவரான நான், 2003ஆம் ஆண்டு, எனது முதல் தாரத்துடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்டேன். எனினும் கடந்த 15 ஆண்டுகளாக, எனது மற்ற இரண்டு காதலிகளும் திருமணமாகமலே என்னுடன் வாழ்ந்து வருகின்றனர்" என்றார்.

ராஜஸ்தான்

## ஒரே நாளில் 15,000 திருமணங்கள்

வடமாநிலங்களில் அட்சய திருதியை நாளில் திருமணம் செய்தால் மணமக்களின் வாழ்க்கை பிரகாசமாக இருக்கும் என்ற ஐதீகம் உள்ளது.

இதன் காரணமாக அந்நாளில் திருமணம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அத்துடன், ஒரே இடத்தில் பல ஜோடிகளுக்கு திருமணம் நடத்தப்படும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

எனினும் கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக அம்மாநிலத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக, இதுபோன்ற பெரிய அளவில் திருமணங்கள் நடத்தப்படவில்லை எனவும் தற்போது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதால் அதிகளவில் திருமணங்கள் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், ராஜஸ்தான் மாநிலத்தில் நேற்றைய தினம் சுமார் 15,000 திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டள்ளது.

நாசிக்

## வெயிலுக்கு 25 பேர் மரணம்

மராட்டியத்தில் 6 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வெயில் வெப்பம் அதிகரித்துள்ளது. இதனால், 25 பேர் உயிரிழந்துள்ளனர்.

கோடை காலம் தொடங்கியதில் இருந்து வெப்ப அலையால் மக்கள் பெரிதும் அவதியுற்று வருகின்றனர். அனல் காற்றும் வீசி வருகிறது. வெயில் கொளுத்துவதால், பாடசாலைகளின் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மராட்டிய சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக்



குறிப்பில், மராட்டியத்தில் 2016ஆம் ஆண்டு வெயில் தாக்குதலுக்கு 19 பேர் உயிரிழந்தனர். அதற்கு பின்னர் 6 ஆண்டுகள் கழித்து 2022ஆம் ஆண்டில், கடுமையான வெயிலால் 25 பேர் உயிரிழந்து உள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


சென்னை

## பராமரிப்பாளரைத் தாக்கிய 'நகுலன்'

சென்னை, வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் எண்ணற்ற விலங்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அங்கு அரிய வகை உயிரினமான 'நகுலன்' என்ற வெள்ளைப் புலியும் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த வெள்ளைப் புலிக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மருத்துவ சிகிச்சையளிப்பதற்காக வெள்ளைப் புலி கூண்டில் அடைக்கப்பட்டது.

சிகிச்சையளிக்கும் பணியில் மருத்துவர்கள், பூங்கா ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர். இந்தப் பணியில் வெள்ளைப் புலியின் பராமரிப்பாளரான செல்லையா என்பவரும் ஈடுபட்டிருந்தார். அப்போது, திடீரென ஆக்ரோஷமடைந்த வெள்ளைப் புலி பராமரிப்பாளரை தாக்கியது.









## பெருநாள் தொழுகைகள்

திறந்தவெளிகளிலும் மஸ்ஜித்துகளிலும் நோன்புப் பெருநாள் தொழுகைகள், நேற்று (03) நடைபெற்றன. இதில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர்.

(படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)



அம்பாறையில்...





மட்டக்களப்பில்...







மன்னாரில்...







திருகோணமலையில்...

ஐ.பி.எல்:

# ராஜஸ்தானை வென்ற கொல்கத்தா

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸ் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட ராஜஸ்தான், அணித்தலைவர் சஞ்சு சாம்ஸனின் 54 (49), ஷிம்ரோன் ஹெட்மயரின் ஆட்டமிழக்காத 27 (13) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 152 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், உமேஷ் யாதவ் 4-1-24-1, அங்குல் றோய் 4-0-28-1, சுனில் நரைன் 4-0-19-0, ஷிவம் மவி 4-0-33-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 153 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா, ஆரம்பத்திலேயே குல்டீப் சென், பிரசீத் கிருஷ்ணாவிடம் ஆரம்பத் துடுப்பாட்டவீரர்களைப் பறிகொடுத்தது. எனினும், அணித்தலைவர் ஷ்ரேயாஸ் ஐயரின் 34 (32), நிதிஷ் ரானாவின் ஆட்டமிழக்காத 48 (37), றிங்கு சிங்கின் ஆட்டமிழக்காத 42 (23) ஓட்டங்களோடு 19.1 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், ட்றெண்ட் போல்ட் 4-0-25-1 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

இப்போட்டியின் நாயகனாக றிங்கு சிங் தெரிவானார்.



இந்நிலையில், பூனேயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரை நடப்புச் சம்பியன்களான சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

அமெரிக்கா

# பைடனை சீண்டிய நடிகர்

அமெரிக்க ஜனாதிபதியை மேடையில் வைத்து நகைச்சுவை நடிகர் ஒருவர் சீண்டிய சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையே கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற விருந்து உபசார நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பிரபல நகைச்சுவை நடிகரான டிரிவோர் நோவா அந்நிகழ்வில் உரையாற்றும்போது "ரஷ்யா போன்று ஒரு மோசமான நாடு இருக்க முடியாது.

அங்கே சுதந்திரம் என்பது பேச்சுக்கு கூட கிடையாது. அந்நாட்டின் எதிர்க்கட்சி தலைவர் அலெக்ஸி நாவல்னி ரஷ்ய ஜனாதிபதியை விமர்சித்ததற்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 2020ஆம் ஆண்டு அவருக்கு விஷம் வைத்து கொலை செய்யும் முயற்சியும் நடைபெற்றது. அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய அவர் ஜேர்மனியில் சிகிச்சை எடுத்தார். மீண்டும் அவரை கைது செய்த ரஷ்ய அரசு 9 ஆண்டுகள் கடும் காவல் தண்டனை விதித்தது.

இப்போது ரஷ்யா, உக்ரேனில் போர் தொடுத்து வருகிறது. இதனால் அந்நாட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே அமெரிக்காவை நினைத்து பாருங்கள். நாம் எல்லோரும் சுதந்திரமாக இருக்கிறோம்.



அமெரிக்க ஜனாதிபதியைக் கூட நான் சீண்டிவிட்டு அமைதியாக போய்விட முடியும். என்னை யாரும் எதுவும் செய்ய முடியாது" எனக் கூறினார்.

பின்னர், அமெரிக்க ஜனாதிபதியைப் பார்த்து, "நான் உங்களை சீண்டியதற்கு எதுவும் செய்ய மாட்டீர்கள் தானே" எனக் கிண்டலாகக் கேட்டார்.

அதன்பின் பேசிய ஜோ பைடன், டிரேவர் நோவாவை பார்த்து, "டிரேவருக்கு ஒரு நல்ல செய்தி. அமெரிக்காவில் நீங்கள் அந்நாட்டு ஜனாதிபதியைக் கூட சீண்ட முடியும். அதற்காக மாஸ்கோவில் உள்ளது போல உங்களை சிறையில் அடைக்க மாட்டார்கள்" எனக் கூறினார்.

அவரது பதிலானது, அங்கிருந்தவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

புத்தளம் மாவட்டம் கற்பிட்டி பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட

## கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராக எஸ்.ஐ.எம். அம்ஜத்



அஸ்ஹர் இப்றாஹீம்

விளையாட்டுத்துறை அமைச்சால் நாடளாவிய ரீதியில் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தி கிராமப்புறங்களிலுள்ள இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் புத்தளம் மாவட்டத்துக்கான கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சையும் நேர்முகத்தேர்வும் அண்மையில் புத்தளம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றதுடன் நேர்முகப்பரீட்சையிலும் சித்தியடைந்து எஸ்.ஐ.எம். அம்ஜத் இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

**"கரப்பந்தாட்டத்தில் கிராமப்புறங்களிலுள்ள இளைஞர் யுவதிகளின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் புத்தளம் மாவட்டத்துக்கான கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளாக எஸ்.ஐ.எம்.அம்ஜத் நியமிக்கப்பட்டுள்ளார்**

செவிபுலனற்றோர் கிரிக்கெட் தொடர்:

## சம்பியனானது அம்பாறை

ஐ.எல்.எம். நாஸிம்

செவிப்புலனற்றோர் கிரிக்கெட் தொடரானது வொலிவோரியன் பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இத்தொடரில், அம்பாறை மாவட்ட அணி, மட்டக்களப்பு மாவட்ட அணி, திருகோணமலை மாவட்ட அணி என செவிப்புலனற்றோர் அமைப்புக்கள் மூன்று அணிகளாக கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியானது, மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்புக்கும் அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்புக்கும் இடையே நடை பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் அணி 10 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 86 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் வெற்றி இழக்காக அம்பாறை மாவட்ட அணிக்கு 87 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

பதிலுக்குத், துடுப்பெடுத்தாடிய அம்பாறை மாவட்ட செவிப்புலனற்றோர் அமைப்பு 10 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இத்தொடரின் நாயகனாக ஹுசைன் ரஸ்வி, சிறந்த பந்துவீச்சாளராக தௌபீக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பனையறுப்பான் கஜமுகாவின் ஞாபகார்த்த கிண்ணத் தொடர்:

## சம்பியனானது கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா



வ. திவாகரன்

மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பனையறுப்பான் கஜமுகா விளையாட்டுக்கழகம் நடாத்திய உறவுகளின் ஞாபகார்த்த கால்பந்தாட்டத் தொடரில் கொக்கட்டிச்சோலை ஈஸ்வரா அணி சம்பியனானது.

அண்மையில் நடைபெற்ற அணிக்கு ஏழு பேர் கொண்ட இத்தொடரில் 34 அணிகள் பங்குபற்றியிருந்தன. இறுதிப் போட்டிக்கு, ஈஸ்வரா அணியினரும், காஞ்சிரங்குடா ஜெகன் அணியினரும் தெரிவு செய்யப்பட்டனர். இறுதிப் போட்டியில் இரண்டு அணியினரும் போட்டியின் வழமையான நேரத்தில் எவ்வித கோல்களையும் பெறாமை காரணமாக பெனால்டி மூலம் ஈஸ்வரா அணி சம்பியனானது.

இத்தொடரில், மூன்றாமிடத்தை விளாவெட்டுவான் ராஜா அணியினர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸிலில்

## உலகிலேயே உயரமான இயேசு சிலை

தெற்கு பிரேஸிலில் உள்ள என்காண்ட்டோ (Encantado )என்ற நகரத்தில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் மோரோதாஸ் ஆண்டனாஸ் மலையில் உலகின் மிக உயரமான இயேசு சிலையொன்று வடிவமைக்கப்பட்டு வருகின்றது.

கிறிஸ்ட் தி ப்ரொடெக்டர் (Christ the Protector) எனப் பெயரிடப்பட்டுள்ள இவ் இயேசு சிலையின் உயரம் 141 அடியாகும்.

மேலும் இச் சிலையின் நெஞ்சு பகுதியில் இதய வடிவ ஜன்னல் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதிலிருந்து பிரேஸில் நகரைப் பார்க்க முடியும் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் இச் சிலையானதுஅடுத்து ஆண்டு பொதுமக்களின் பார்வைக்காகத் திறக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தோனேசியா

## மலைப் பாம்புகளுடன் நடனமாடும் இளைஞர்

இந்தோனேசியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சுமார் 20 அடி நீளம் கொண்ட 2 மிகப்பெரிய மலைப் பாம்புகளைத் தனது தோளில் சுமந்தவாறு நடனமாடிய வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

அவர் அப்பாம்புகளுக்கு அருகில் சென்றபோது அதில் ஒரு பாம்பு அவரை விழுங்க முயன்றமையும் குறித்த வீடியோவில் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் சமூக வலைதளங்களில் அதிகளவான லைக்குகளைப் பெறுவதற்காககவே அவர் இதனைச் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

மலைப்பாம்புகள் விஷம் இல்லாதவை. ஆனால் மனிதர்களையே விழுங்கி விடும் அபாயம் நிறைந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

## நவாஸ் ஷெரீப்பின் வழக்கில் புதிய திருப்பம்



பாகிஸ்தானில் 3 தடவைகள் பிரதமராகப் பதவி வகித்தவர் நவாஸ் ஷெரீப். இவர் கடந்த 2017ஆம் ஆண்டு 'பனாமா கேட்' ஊழல் வழக்கில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இதனையடுத்து அங்கு ஆட்சி பொறுப்புக்கு வந்த இம்ரான்கான் அரசு, நவாஸ் ஷெரீப் மீது பல்வேறு ஊழல் வழக்குகளைப் பதிவு செய்திருந்தது.

இதில் ஒரு வழக்கில் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நவாஸ் ஷெரீப்புக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து பாகிஸ்தான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து அவர் சிறையில் அடைக்கப்பட்ட நிலையில், 2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மருத்துவ சிகிச்சைக்காக லண்டன் சென்றார். ஆனால் இன்று வரை பாகிஸ்தான் திரும்பவில்லை.

அவரை பாகிஸ்தானுக்கு நாடு கடத்தி அவர் மீதான மற்ற ஊழல் வழக்குகளையும் விசாரித்து தண்டனை வழங்க இம்ரான்கான் அரசு தீவிரமாக முயற்சித்தது. ஆனால் முடியவில்லை.

இந்நிலையில் அண்மையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தில் இம்ரான்கான் அரசு கவிழ்ந்ததை தொடர்ந்து, நவாஸ் ஷெரீப்பின் தம்பி ஷபாஸ் ஷெரீப் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பதவியேற்றார்.

அதை தொடர்ந்து, இப் புதிய அரசு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், பாகிஸ்தானுக்குத் திரும்புவதற்காக அவருக்கு 10 ஆண்டுகள் செல்லுபடியாகும் புதிய கடவுச்சீட்டை கடந்த மாதம் வழங்கியது. அதன்படி நவாஸ் ஷெரீப் விரைவில் பாகிஸ்தான் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் நவாஸ் ஷெரீப்பின் தண்டனையை இரத்து அல்லது இடைநீக்கம் செய்வது குறித்து ஷபாஸ் ஷெரீப் தலைமையிலான அரசு தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஸ்பெயின்

## 'பெகாசஸ்' தாக்குதலுக்குள்ளான ஸ்பெயின் பிரதமர்

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சாஞ்செஸ் மற்றும் அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் மார்கரிட்ட ரொபெல்ஸ் ஆகியோரின் தொலைபேசிகள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிடப்பட்ட அறிக்கையில், ஸ்பெயின் பிரதமர்



மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சரின் தொலை பேசிகள் 'பெகாசஸ்' (Pegasus) எனப்படும் உளவு மென்பொருள் மூலம் கடந்த வருடம் பாதிக்கப்பட்டன.

இப் பெகாசஸ் மென்பொருள் அரசாங்க நிறுவனங்கள் மட்டுமே பயன்படுத்த முடியும். ஆனால் அரசு அதற்கு அனுமதி வழங்காத நிலையில் யாரோ மூன்றாம் நபர் அவர்களின் தொலைபேசிகளை உளவு பார்க்க முயற்சித்துள்ளனர்.

இந்த உளவு நடவடிக்கையை நாட்டின் வெளியில் இருந்து யாரோ மேற்கொண்டுள்ளனர் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 04 மே 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.